திருவள்ளுவர் ஆண்டு 2005
மார்கழி
1974 டிசம்பர்

அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்



திருவெம்பாவை

முன்னைப் பழம்பொருட்கும்
முன்னைப் பழம்பொருளே !
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும்அப் பெற்றியனே !
உன்னைப் பிரானாகப்
பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர்
ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே
தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே
எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும்
இலோமேலோர் எம்பாவாய் !

— மாணிக்கவாச[கர்]

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600 018
ஆண்டுச் சந்தா ரூ. 5
தொலைபேசி : 7682

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

பழனி ஞானதண்டாயுதபாணியைப் பணிந்திட வாரீர்!
அழகான திருமுருகன் அருள் பெறவே திரண்டு வாரீர்!
செந்தேனும் பாலும் மணக்கும் சேயோனை வழிபட வாரீர்!
சந்தன விபூதி மணக்கும் திருமேனி கண்டு மகிழ வாரீர்!

முடிக்காணிக்கை தரத் தனியிடம்!
தங்குவதற்கேற்ற வசதிகள்!
முதியவரும் முடியாதோரும் முருகன் அருகே செல்ல
இழுவை ரயில் வசதி!
பொங்கியெழும் பேரழகனைத் தாங்கிவரும் தங்கரதம்
காண வசதிகள்!

அத்தனையும் செய்து அழைக்கிறது பழனித் திருக்கோயில். தமிழ்க்கடவுளாம் கந்தப்பெருமானின் அருள் பெற்று, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கண்காணிப்பில் கீழே கண்ட நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

1. அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரி
2. அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி
3. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
4. அருள்மிகு பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி
5. கார்த்திக்பள்ளி (ஆங்கிலப்போதனை)
6. செவிடர்பள்ளி
7. நாதசுரக் கல்லூரி
8. வேத ஆகமப்பாடசாலை
9. அன்புஇல்லம் (அனாதை விடுதி)
10. முதியோர் இல்லம்
11. குழந்தைகள் காப்பகம்
12. மருத்துவமனை

பழனித் திருமலையில் நாளும் பெருகிவரும் பக்தர்கட்குப் போதிய வசதிகள் செய்து தருவதற்காக 60 லட்சரூபாய் செலவில் மாபெரும் திருப்பணித் திட்டம் செயல்பட உள்ளது.

அறங்காவலர் குழு:

திரு. பு. மனோகரன், தலைவர், அறங்காவலர் குழு

அறங்காவலர்கள்

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி, பி.எஸ்ஸி.,
திரு. என் நாச்சிமுத்து, எம்.எல்.ஏ.
திரு. புலவர் சி. பழனிச்சாமி, எம்.எல்.ஏ.
திரு ஏ. பச்சையப்ப கவுண்டர்

வி. சௌ. கோதண்டபாணி, பி.எஸ்ஸி., பி.எல்.,
துணை ஆணையர்-நிர்வாக அதிகாரி

அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 3	ஆனந்த மார்கழி 1974 டிசம்பர்	ஓசை 6

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

மார்கழித் திங்கள் பிறந்து விட்டது. இந்த மாதம் முழுவதும் நோன்பிருந்து, தைப் பொங்கலைக் கொண்டாடி நிறைவு செய்யப் போகிறோம். அடுத்த இதழ் "அருளோசை" பொங்கற் சிறப்பிதழாக மலரும்.

அடுத்த இதழிலிருந்து "உரைகல்" பகுதியை மீண்டும் தொடங்கக் கருதியிருக்கிறோம். "அருளோசை"யின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டுள்ள அன்பர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் அதில் இடம்பெறும். கட்டுரைகள், கதை முதலியனவற்றைச் சீர்தூக்கித், தங்கள் கருத்துக்களை எழுதியனுப்பக் கேட்டுக் கொள்கிறோம். கடிதங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் அவசியம்.

இந்த இதழில் "மனம் மாறியது" என்ற தலைப்பில் கதை ஒன்று வெளியிடப் பெற்றுள்ளது. இதுபோன்ற சமய நீதியைப் போதிக்கும் கதைகள் அருளோசையில் வெளியிடுவதற்கு வரவேற்கப்படுகின்றன. வெளியிடப்பெருதவற்றைத் திரும்பப் பெற போதிய தபால்தலை வைத்து அனுப்புதல் அவசியம்.

சந்தா முடிவடையும் அன்பர்கள் தங்கள் சந்தாக்களை உடனடியாகப் புதுப்பித்து, பேரவையின் திருத்தொண்டில் துணை நிற்கக் கேட்டுக் கொள்கிறோம்.

நண்பர்களுக்குப் பொங்கல் பரிசு வழங்க விரும்புவோர் "அருளோசை"க்கு ஓராண்டுச் சந்தாவை அனுப்பிவைத்து, நண்பர்களின் முகவரியைத் தெரிவித்தால் அவர்களுக்கு "அருளோசை" அனுப்பிவைக்கப் பெறுவதோடு, பெயர்ப் பட்டியலும் "அருளோசை"யில் வெளியிடப்பெறும்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

மனமே உனக்கென்ன.........?

ஆசையறுய்! பாசம்விடாய்! ஆனசிவ பூசைபண்ணுய்!
நேசமுடன் ஐந்தெழுத்தை, நீ நினையாய்!—சீசீ
சினமே தவிராய்! திருமுறைகள் ஓதாய்!
மனமே உனக்கென்ன வாய்.

—சிவபோகசாரம்.

—:o:—

இந்த இதழில்

கதை, கட்டுரைகளில் வரும் கருத்துக்களுக்கு, அவற்றை எழுதியவர்களே பொறுப்பு.

"அருளோசை"

விஞ விடைப் பகுதி-நவம்பர்-74

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு: திரு. எஸ். சுந்தரம், வெண்பாவூர், திருச்சிராப் பள்ளி மாவட்டம், சந்தா எண். 3052.

இரண்டாம் பரிசு: திரு. செ. செண்பகலிங்கம், மறவன் குடியிருப்பு, கன்னியாகுமரி மாவட்டம், சந்தா எண். 450.

மூன்றும் பரிசு: திரு. ந. சுந்தரம், களம்பூர், வடஆர்க்காடு மாவட்டம், சந்தா எண். 3379.

நான்காம் பரிசு: திரு. மு. முத்துக்கிருஷ்ணன், வடமணப்பாக்கம் வடஆர்க்காடு மாவட்டம், சந்தா எண். 2777.



திருவளர் செல்வ,

நல்வாழ்த்துக்கள் !

முன் கடிதத்தில் நாம் எழுதியதைப்போலவே புத்தர், மோன அமைதி அல்லது நிர்வாண நிலையை மிகுதியும் மேற்கொண்டு வற்புறுத்தியதால் அவருடைய சமயநெறி, தொடர்ச்சியான விவாதங்களுக்கு ஆளாக்கப்படுகிறது. உயிர், உண்டா? இல்லையா? என்ற விவாதத்தைப்போலவே, பௌத்த மதத்திற்குக் கடவுள் நம்பிக்கை உண்டா? இல்லையா? என்பதும் இன்றளவும் கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது. புத்தர், கடவுள் உண்டு என்று கூறவில்லை. இஃது உண்மை. ஆனால் அறிவுத் தினவு எடுத்தோர் எதிர்க் கேள்வி தொடுக்கின்றனர். அதாவது, "கடவுள் இல்லையென்றும் சொல்லவில்லையே" என்பது அவர்கள் கேள்வி. ஆனால், பௌத்த மதத்தில் ஆழ்ந்த பற்றுள்ளமுடையவர்கள் புத்தருக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை என்ற கொள்கையையே என்று வலியுறுத்துகின்றனர். அவர்கள் "உலகத் தோற்றத்திற்குக் கடவுள் அவசியமில்லை; கடவுள் உலகத்தைப் படைத்தார் என்று ஏற்றுக்கொண்டால் விடை சொல்ல முடியாத அளவுக்குப் பல இடர்ப்பாடுள்ள வினாக்கள் தோன்றும். ஆதலால், உலகத் தோற்றத்திற்குக் கடவுள் அவசியமில்லை என்பதே புத்தரின் போதனை" என்று கூறுகின்றனர். திருவளர் செல்வ, அதுமட்டுமன்று, பௌத்தத்தின் தோற்றத்திற்குக் காரணமே இந்து சமயத்தின் குறைகள்தான்

என்பதை மறந்து விடாதே! இந்து சமயம் உயிர்ப்புள்ள சமயமாக விளங்க அதன் தலைவர்கள், புரோகிதர்கள் என்றும் உடன்பட்டதில்லை. ஒரு சமயம் உயிர்ப்புள்ள சமயம் என்பதற்கு அது நிலைபெற்றிருத்தல் மட்டும் அடையாளமல்ல. உயிர்ப்புக்குரிய அடையாளங்களில் நிலைபெறுதலும் ஒன்று. உயிர்ப்பின் சிறப்பான அடையாளம் காலத்திற்குக் காலம் தேவையற்ற பழைமைகளைக் கழித்துத் தேவையான புதுமைகளை ஏற்றுக்கொள்ளும் வளர்ச்சியுடன் கூடிய நிலைபேறே உண்மையான உயிர்ப்பின் அடையாளம்.

இதனையே, "பழையன கழிதலும், புதியன புகுதலும்" என்று சான்றோர் கூறுவர். திருவாசகமும் இறைவனை "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்குப் பேர்த்தும் அப்பெற்றியனே'' என்று பாராட்டும். ஆனால், இந்து சமயத் தலைவர்கள், புரோகிதர்கள் இந்த மனப்போக்குடையவர்கள் அல்ல. அவர்கள் இருப்பதைப் பாதுகாப்பவர்கள்; மாறுதலை விரும்பாத கொள்கையினர். அதனாலேயே இந்தியாவில் பல்வேறு சமயங்கள் தோன்றும் சூழ்நிலை உருவாயிற்று. ஆம்! இந்தியாவில் பல்வேறு சமயங்கள் தோன்றின, அயல்நாட்டுச் சமயங்களும் இறக்குமதியாயின. புத்தர் காலத்தில் இந்து சமயமக்கள் அச்சத்திற்கு ஆட்பட்டுப் பல்வேறு பெயர்களில் எண்ணற்ற சிறு தெய்வங்களைக் கடவுள் எனக் கொண்டாடி வழிபடத் தொடங்கி விட்டனர். உண்மையைச் சொன்னால், உயர்ந்த உபநிடதங்கள் சொன்ன கடவுள் வழிபாடு அருகிப் பேய்களையும், பிசாசுகளையும், சைத்தான்களையும் தெய்வங்களென நம்பி வழிபடுகின்ற கீழ்மைநிலை உருவானது. திருவளர் செல்வ, இன்னும் உயர்சாதி மனப்பான்மையுடைய மேட்டுக்குடியினர் கிராம மக்களை இத்தகைய வழிபாட்டின் வழியிலேயே செலுத்த முயற்சி செய்கின்றனர். கிராம தேவதைகள் பற்றிப் பேசுகின்றனர். பூசாரிகளைக் கூட்டுகின்றனர். இவையெல்லாம் எதற்கு? தமிழகத்தின் அடித்தட்டு மக்கள் ஞானத்தில் உயர்ந்து ஒரு கடவுள் வழிபாட்டுக்கு வந்துவிடக் கூடாது; பூசாரிகள் குருக்கள்களாக வந்துவிடக் கூடாது என்பதற்காகவே! புத்தர் காலத்திலும் இதே நிலைதான். ஆதலால், "இதைக் கும்பிடலாம்; அதைக் கும்பிடக் கூடாது" என்று பகுத்துக் காட்டி


மக்களைத் திருத்துவது கடினம் என்று புத்தரைக் காட்டிக் கடவுள் வழிபாட்டினையே புத்தர் மறுத்தார் என்று கொள்வோருமுண்டு.

புத்தர், தாமே உலகத்திற்குக் காரணம். தம்மை அடைந்தவர்களுக்குத் தாம் நன்மை செய்யப் பெறும் என்று கூறியதாக வாக்கியங்களும் உண்டு. இவை ஆய்விற்குரியன. ஆனால், எப்படியோ, புத்தர் விரும்பியோ விரும்பாமலோ பௌத்தர்களால் புத்தர் கடவுளாக வழிபடப் பெறுகின்றார். பௌத்த மதத்தின் ஹீனயாணப் பிரிவினர் புத்தரையே கடவுளாக ஏற்று வழிபாடு செய்கின்றனர். மகாயாணிகளுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு.

திருவளர் செல்வ, இந்து சமயத்திற்கும், பௌத்த சமயத்திற்குமுள்ள அடிப்படை வேற்றுமை ஒன்று உண்டு. அதாவது, இந்து சமயம் வேதங்களிலிருந்து தொடங்குகிறது. அதற்கு மூலம் வேதமே! பௌத்த சமயத்திற்கு வேதம் உடன்பாடல்ல. அதற்கு மூலம் புத்தி அல்லது அறிவு என்பதேயாகும். அதனால்தான் நாத்திகக் கொள்கையைப் பின்பற்றிய பெரியார் ஈ. வெ. ரா. புத்தரையும் பௌத்த சமயத்தையும் போற்றினார். அஃது அறிவுக்கு முதலிடம் கொடுக்கிறது என்பது அவர் கருத்து. ஆனால், பௌத்த மதத்திலும் அஃது ஒரு கொள்கையே தவிர நடைமுறையில் இல்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்ளாதது நமது குறையே! புத்தர் அறிவை மையமாக வைத்து உபதேசித்தாலும் பௌத்தர்கள் புத்தருடைய வாக்குகளையே வேதவாக்கியங்களாக நம்புகின்றனர். அதில் அவர்கள் விவகாரம் செய்ய விரும்புவதில்லை. இந்து சமயம் இந்திய சமூக வாழ்க்கையில் இயல்பாகத் தோன்றி வளர்ந்தது. பௌத்த சமயம் வரலாற்று நிகழ்வில்-வரலாற்றுப் பின்னணியில் தோன்றியது. பௌத்த சமயம் இயல்பாக மக்களை ஈர்க்கும் கவர்ச்சியுடையதன்று. நுகர்தல் உயிரியற்கை. நுகர்வுக் கொள்கைக்கு எதிரான சமயங்கள், மக்களைக் கவர்ச்சிப்பது எளிதன்று. ஆனால், பௌத்தம் தொடங்கிய காலத்தில் மக்களால் கவர்ச்சிக்கப்பட்டது. ஏன்? அன்றிருந்த சமுதாயத்தின் சூழ்நிலை! புத்தரிடத்தில் ஞான வேட்கையைத் தோற்றுவித்ததே துன்பக் காட்சிகள்தாமே! இயல்பான இன்ப நுகர்வுக்கு மாறாகத் துன்பச் சூழலில் சிக்கி உயிர்கள்

அல்லற்படும்பொழுது மாற்று வழியை ஏற்றுக்கொள்வது இயல்பு. இங்ஙனம் ஏற்றுக்கொள்வது அறிவு பூர்வமாக அல்ல; நிர்ப்பந்தங்களே காரணம். ஆனால், நிர்ப்பந்தங்கள் தளரும்பொழுதோ, துன்பச் சூழல்கள் மாறும்பொழுதோ இந்தக் கவர்ச்சியும் ஈடுபாடும் குறையும்.' ஆதலால், நமது நாட்டில் பௌத்தம் தோன்றிய காலத்திலிருந்த கவர்ச்சி வரவரக் குறைந்தது. பௌத்த சமயத்திற்கு ஏற்பட்ட இந்தத் தளர்ச்சியை மாற்றவே பௌத்தர்கள் புத்தரைக் கடவுளாக்கினர்; அவருக்கு உருவம் கொடுத்தனர். ஆக, பௌத்தம் எதை எதிர்க்கத் தொடங்கியதோ அதே குறைக்கு அது மீண்டும் ஆளாக்கப்பட்டு விட்டது. இந்து சமயம் கடவுளை உணர்த்தும் திருவுருவங்களையே வணங்கும்படி வழிநடத்துகிறது. ஆனால், பௌத்தமோ புத்தர், புத்தரின் மாணாக்கர்கள் ஆகியோரின் பருவுடல் தோற்றத்தையே வழிபட வழிநடத்துகிறது. இந்து சமயம் சாதி வேறுபாடுகளில் பிணைக்கப்பட்டிருக்கிறது. பௌத்தம் அப்படியல்ல. அதனால், பௌத்தம் எந்த நாட்டுக்குச் சென்றாலும் அந்த நாட்டு மக்களோடு எளிதிற் கலக்க முடிந்தது. அதனால், பிறந்த நாட்டைவிடத் தென் கிழக்காசிய நாடுகளில் இன்றைக்குப் பௌத்தம் செல்வாக்காக இருக்கிறது. இது பற்றி அடுத்த இதழில் விரிவாக எழுதுவோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.





அன்பு

(தவத்திரு. குன்றக்குடி அடிகளார்)

வாழ்க்கை, உழைப்பு என்ற அச்சில் சுழல்கிறது என்பதே உண்மை. ஆனால், அந்த அச்சுத் தேயாமல் கழன்று ஓடாமல் பாதுகாப்பது அன்பேயாம். அன்பு! அம்மம்ம! அன்பிற்கு எவ்வளவு ஆற்றல்! 'ஆற்றல் மிக்க அன்பு' என்று அருள்நூல் கூறும். 'அன்பே சிவம்' என்பது திருமந்திரம். அன்பு. உயிரின வாழ்க்கைக்கு மூச்சுப் போன்றது. அதனாலன்றோ வள்ளுவம், "அன்பின் வழியது உயிர்நிலை" என்றது. உண்மையான ஒரு மனிதனுக்கு உயிர் இருக்கிறதா? இல்லையா? என்பதன் அடையாளம் அவனுடைய நடமாட்டமல்ல. அவன் உண்ணும் உணவின் அளவல்ல; அவனுடைய இனப்பெருக்கமுமல்ல. வீட்டில் சில பிணங்கள், இடுகாட்டில் சில பிணங்கள் என்று யாரோ ஒரு பழுத்த மனிதர் சொன்னதைப் போல அன்பில்லாதவர்கள் வாழ்பவர்கள் ஆகார்.

எது அன்பு? எந்த உயிரிடத்தும் காரணமில்லாமலேயே பள்ளந்தாழ் உறுபுனல்போலத் தோன்றி வளர்வது அன்பு. தூய அன்பிற்குக் காரணம் கிடையாது. காரிய சாதனை அல்லது நோக்கமும் கிடையாது. காரியங்கள் நிகழும். தாம் வாழும் காரியமன்று. மற்றவர் வாழும் காரியங்கள் நிகழும். உயிரியற்கையின் அடிப்படையே வாழ்வித்து வாழ்தல்தான்! அதுதான் அன்பின் இலக்கணம். இன்றும் இந்த இலக்கணத்திற்குத் தாவர இனங்கள், விலங்கினங்கள் மாறுபடாது உயிர் வாழ்கின்றன. ஆனால், பகுத்தறிவு படைத்த மனிதனோ அன்பிற்குப் போலி முலாம் பூசிப் பொய்ம்மை பெருக்கிப் பகைமை வளர்த்துக் களவும் காவலும் படைத்துச் சிறைச்சாலையைக் கட்டி வாழ்ந்து கொண்டு இருக்கிறான். ஏன்? அன்பின்மையே காரணம். அதனால், உயிர்

வாழ்க்கைக்கு இன்றியமையாத எலும்பினைப் பெருத புழுக்களைக் கதிரொளி காயும்; நீதி முறைப்படி பார்த்தால் கதிரவன் குற்றம் சாட்டப் படுவான். புழுவிற்கு எலும்பில்லாதது இயற்கையின் குறை! படைப்பின் விசித்திரம்! ஆதலால், எலும்பில்லாத புழுவைக் கதிரவன் காய்தல் நீதியுமன்று; நெறியுமன்று. ஆனல், வினைப்பயனில் நம்பிக்கையுடைய வர்கள், உயிர்க்குப் புழுப்பிறப்புக் கிடைத்தது அதற்கு ஒருவகையான தண்டனை என்று கூறினுலும் கூறலாம். ஆனல், அப்பரடிகள் வாக்குப் படி பார்த்தால் அது புண்ணியப்பிறவி என்று கூறப்படும். மனிதனிடத் தில் இருக்கும் கெட்ட குணமாகிய ஆங்காரம் புழுவினிடத்தில் இல்லை யெனத் தெரிகிறது. புண்ணியத்தின் பயன் என்னவோ? என்பில்லாத புழுவை வெய்யில் சுடுவதைப் போல அன்பில்லாத மனிதனை அறக் கடவுள் சுடும். இன்று உலகியலில் எலும்பில்லாத மனிதன் என்று கோழையை அழைக்கின்றனர். வீரம் இல்லாதவன் மட்டுமா கோழை? அன்பில்லாத மனிதனும் ஒரு கோழைதான்! வீரமாவது இன்னெரு மனிதனிடத்தில் காட்டப்பெறுவது! ஒரு மனிதன் அன்பினைக் காட்ட, அன்பினில் வளரத் தன் அடங்காப்பிடாரித் தனத்தோடு போராட வேண்டும்; தன் நலத்தை எதிர்த்துப் போராட வேண்டும்; ஆர்ப்பரிக் கும் ஆணவத்தை எதிர்த்து அடக்க வேண்டும்; செருகளத்தில் போரா டும் ஒருவர் இந்தக் களத்தில் தோற்றுவிடுவர். இந்தக் களத்தில் வென்று வாழ்வதே உண்மையான வீரம்! ஈரப்பசை இல்லாத நிலத்தை எளிதில் கண்டுணரலாம். அதுபோலவே, அன்பில்லாத மனிதர் வாழும் நிலப்பகுதியையும் எளிதில் கண்டு கொள்ளலாம். ஆங்கு ஏழ்மையிருக்கும்; சண்டை சச்சரவுகள் இருக்கும். காவல் நிலையங்கள் ஓயாது தொழிற்படும். ஏன்? சில சமயங்களில்- போட்டியில் கடவுளுக்கு விழாக்கூட எடுப்பர். ஆனல், அந்த விழாவில் கடவுள் தான் இருக்கமாட்டார்! அறக்கடவுள் சீரான துலாக்கோல் போன்றவர். அவர் அன்பில்லாதவரைச் சுட்டெரிப்பர் என்று வள்ளுவம் கூறுகிறது. மனித உலகம் அமைதியாகக் கூடிக் கலந்து சிரித்து மகிழ்ந்து வாழ அன்பே தேவை. அன்பு நெறியில் மனித உலகம் வாழும். அதனல் இந்த மண்ணகம் சொர்க்கமாகும். யார்மாட்டும் அன்பு காட்டுவோம்! அன்பு காட்டுவதற்காகவே அன்பு காட்டுவோம்! அன்பு காட்டும் உயர்ந்த சீலத்தில் பகைமையையும் மறப்போம்! வையகம் வாழ அன்பினைப் போற்றி வளர்ப்போம்.

—:o:—

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. '74

அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. 80

திருக்குறள்—அன்புடைமை-அதி. 8,

உ

சிவமயம்

சிவஞான போதச்சொல் இரண்டன் உண்மைப் பொருள்

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருக்குறளில், பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்பது + அறிவு. என்னும் பாட்டின் உரையில், 'பேதைமை' என்ற சொல்லின் பொருள் அவிச்சைஎன்ற வடசொற் பெய்து கூறப்பட்டது.

அவிச்சை என்பது வடசொல். அவித்யா என்பது. அவ்வடசொல் லிற்கு அடியான ஆரியபாடை. நன்னூல். 146, 148, 149. சங்கர நமச் சிவாயப் புலவர் எழுதிய உரையில், ஆரியத்திற்குச் சிறப்பெழுத்தாய்த் தமக்கேற்ற பொதுவெழுத்தாகத் திரிந்து வடசொல்லாம்" "ஆரிய மொழி கள் வடமொழியாங்கால்..............முன்னர்வரும்." "ஆரிய மொழியுள் ....வடமொழியாம்" என்றுள்ளன காண்க. ஆரியம் இயற்கை. வட மொழியாக்கம்.

'மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை என்பன ஒரு பொருட் கிளவி' (351. பரிமேலழகருரை)

'இருள்சேர் இருவினையும் சேரா' (5) என்றதனுரையிலே அவருரை இது. "இன்ன தன்மைத்தென ஒருவரானும் கூறப்படாமையின் அவிச்சையை இருள் என்றும்...........கூறினர்."

'மெய்யுணர்தல்' என்ற தலைப்பின் பொருள் விளக்கத்தைக் கொண்ட கொளு (அவதாரிகை), பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களை யும் விபரீத ஐயங்களான் அன்றி உண்மையான் உணர்தல். ஐயந்திரிபு எனத் தமிழிலும் சம்சய (சந்தேக) விபரீதம் என ஆரியத்திலும் கூறும் மரபு பிறழக் கூறியதன் காரணம் உண்டு. திருவள்ளுவர், 'மெய்யுணர் தல்' என்னும் தலைப்பின்கீழ் உள்ளவற்றுள், விபரீதம் முன்னும் ஐயம் பின்னும் வைத்துக் கூறினர். பரிமேலழகரும் அங்கு அவ்வண்ணமே (அங்கனமே) விபரீதவையங்கள் என்றார். அவ்விரண்டனுள் விபரீதம் உணர்வு என்னும் தமிழ்ச்சொல்லோடு கூட்டிச் சொல்லப்பட்டது. பட்டாலும் அஃது உணர்வு ஆகாது. உணருந்திறத்துள் மாறும் வேறும் பட்டது விபரீதம்.

பொருள் வேறு, பொருளல்லன வேறு. பொருளைப் பொருளாகவும் பொருளல்லனவற்றைப் பொருளல்லனவாகவும் (மாறுபடாமல்) உள்ள வற்றை உள்ளவண்ணமே உணர்தல் உண்மையான் உணர்தல்.

பொருளைப் பொருளல்லாததாயும். பொருளல்லாததைப் பொருளா யும் மாறுபட அறிதல் திரிபுணர்ச்சி. இதுவே விபரீதஞானம் என்று சொல்லப்படும். படவே விபரீதவுணர்வு என்றது மரபுவழு அன்று.

இவ்விபரீத ஞானத்தை, உண்மை ஞானமாக் கொள்வதும் அது. திருவள்ளுவர் அதனை, விபரீதத்திற்குரிய பொதுவிலக்கணம் ஆக்கி உணர்த்தும் இடத்தில் 'மருள்' என்னுந் தமிழ்ப்பெயரால் கூறினர். அது "பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருள்" என்றது. இதனுரையிலே பரிமேலழகர் நல்ல விளக்கம் செய்தருளி னர். அதற்கு விளக்கம் இது :—(அ) பொருளல்லன :—(1) மறுபிறப்பும் இருவினைப் பயனும், கடவுளும் இல்லை எனலும் (2) மற்றும் இத்தன்மை யவும் சொல்லும் மயக்க நூல் வழக்குக்கள்.

(ஆ) பொருளாவன,—(1) மறுபிறப்புண்டு, இருவினைப் பயனுண்டு, கடவுள் உண்டு. (2) மற்றும் இத்தன்மைய சொல்லும் மெய்ந்நூல் வழக்கு.

இப்படி உணர்தல் உண்மையானுணர்தல் 'தெருள்' எனப்படும். மயக்கநூல் வழக்குக்களை மெய்ந்நூல் வழக்கு எனத் துணிதல் 'மருள்' எனப்படும்.

"குற்றியை மகன் என்றும் இப்பியை வெள்ளி என்றும் இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்ருகத் துணிதலும் அது" (பரிமேலழகர்)

மருளான் மாணப் பிறப்பு ஆம் என்று (திருவள்ளுவர்) ஒன்று கூறி இரண்டுணர்த்தினர். மாணப்பிறப்பு என்றதால் பிறப்புத் துன்பம் என்பது கூறப்பட்டது. அது மருளான் ஆம் என்றதால் அதற்கு முதற்காரணம் அவிச்சை என்பது கூறப்பட்டது. இவற்றை அக் குறளுரையிலே உள்ள "இன்பமில்லாத பிறப்பு" "விபரீதவுணர்வானே யுளதாம்" என்ற பொருளோடு சார்த்தியுணர்க.

இதுவரையில், 'மருள்' என்னும் பெயர்ப்பொருள் விபரீதஞானம், விபரீதவுணர்வு, அவிச்சை, மயக்கம் என்ருகும் என்ற பரிமேலழகருரையைச் சிறிது காட்டினேம்.

அடுத்து, அம் மருள் (அவிச்சை) நீங்கி மெய்யுணர்வுடையராயினுர்க்கு அம்மெய்யுணர்வு (டைமை) பிறப்பினை நீக்கிப் (பேரின்ப) வீட்டினைக் கொடுக்கும். மாசறுகாட்சி, கேவலஞானம், மெய்யுணர்வு, நிரதிசயாநந்தம், இருளில்லாத இன்பம் எல்லாம் ஒன்றே. நுட்ப வேறுபாடுணர வல்லோர்க்கு மெய்யுணர்வாகிய கேவலப் பொருள் நிமித்தகாரணம். நிரதிசயாநந்தம் வீடாகும் எனல் விளங்கும். மணக்குடவரும் இருள் அறியாமை (அவிச்சை) என்றே உரைத்தார். பரிதியாரும் அஞ்ஞானம் என்ருர். காளிங்கரும் தெளித்தார்.

திரிபு (விபரீதம்) ஒன்றனைப் பிறிதொன்ருகத் துணிதல். ஐயம் பலதலையாயவுணர்வு. செவ்விதிற்றுணிதலுமில்லை. முரணுற்ற துணிவு (விபரீதமு)மில்லை. மறுபிறப்பும் இருவினைப்பயனும், கடவுளும் உளவோ இலவோ என ஒன்றிலும் துணிவு தோன்ருது நிற்பது ஐயம். அவை உள்ளன எனத் துணிந்து நிற்பது தெளிவு. அவை இல்லை என்னும் பொய்ந்நூல் வழக்கை மெய்ந்நூல் வழக்கெனத் துணிதல் திரிபு.

ஐயத்துள்ளும் வேறுபாடுளது. பிறப்பும் வினைப்பயனும் கடவுளும் உளவோ இலவோ எனத் துணிவு தோன்ருத நிலையும், பேய்த்தேரோ நீரோ எனவும் கயிருே பாம்போ எனவும் துணிவு தோன்ருத நிலையும் வேறுபடலறிக. முதலது பலதலையாயவுணர்வின்பாலது. ஏனையிரண்டும் இருதலையாயவுணர்வின்பாலன. உள எனத் துணிதலும், பேய்த்தேர் எனத் துணிதலும் கயிறென்ருே பாம்பென்ருே துணிதலும் ஒருதலையுணர்வு. இதனின் மேலாய முடிவு நிலையே மெய்யுணர்வு. பாம்பு எனத்துணிதல் மெய்யுணர்வுதான். ஐயத்தின் நீங்கித் தெளியும் உணர்வே 'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்' என்றதில் இது கொள்ளப்படுமா?

எச்சொல்லும் நிலைவேறுபாட்டிற்குத்தகப் பொருள் வேறுபாடுறும். திகள்வி, நினைவு, தெளிவு, நிலை என்ற நாற்பெயரும் முறையே ஆரியத்தேல், சிரவணம், மநநம், நிதித்தியாசனம், நிட்டை எனப்படும். அவை

அச்சொற்களைப் பொருட் பொருத்தம், தகுதி, அழியாப்பயன், மரபு பிறழாமை முதலியவற்றை நோக்காது ஆளுதல் அறிவுடைமைக்குத் தகாது. எல்லாவற்றையுங் கேட்டல் சிரவணம் எனப்படாது சாத்திரத்தில். நினைத்தலும் தெளிதலும் நிற்றலும் அன்னவே. இதனை "முந்தியவொருமையாலே மொழிந்தவை கேட்டல் (1) கேட்ட சிந்தனை செய்தல் (2) உண்மை தெளிந்திடல் (3) அது தானாக வந்தவாறு எய்த நிட்டைமருவுதல் என்று நான்காம். இந்தவாறு அடைந்தோர் முத்தி எய்திய இயல்பினோரே" என நம் ஆசாரிய சுவாமிகள் அருளிய திறத்தால் நன்குணரலாம். 'மொழிந்தவை' என்றதே அதிமுக்கியம். இந்த நான்குமே ஞானம். கேட்டலறிவு, சிந்தனையுணர்வு, தெளிவுணர்வு, ஞானநிட்டை என்னுந் தொடர்களே அவ்வுண்மைக்குச் சான்று. சிவஞான சித்தியாரில், "கிளக்கின் ஞானம் கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தல் என ஈரிரண்டாம்" என்றமை காண்க.

மருள், இருள், ஐயம், திரிபு முதலியவற்றையும் பொருட்பொருத்தம் முதலியவற்றை நோக்காது ஆளுதல் அறிவுடைமைக்குத் தகாது.

திருவள்ளுவர் 'இருள்சேர் இருவினையும் சேரா' 'இருள்நீங்கி யின்பம்பயக்கும். மருள்நீங்கி மாசறு காட்சியவர்க்கு." "பிறப்பென்னும் பேதைமை" என்று இருள், மருள், பேதைமை என்ற சொல்லை ஆண்டார். 'அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்' 'இருள்சேர்ந்த இன்னாவுலகம்' என்புழி நின்றமையும் 'இருள்சேர் இருவினையும்' 'இருள்நீங்கி யின்பம்பயக்கும்' ஐந்தும் இருள்தீர எண்ணிச் செயல்' என்புழி நின்றமையும் இருள் என்பது ஒரே பொருளதாமோ? விளக்கற்றம் பார்க்கும் இருளும் பொருளென்னும் பொய்யா விளக்கம் அறுக்கும் இருளும் இன்னாவுலகம் சேர்ந்த இருளும் ஒன்ருமோ? 'மருள் தீர்ந்த மாசறுகாட்சியவர்' மருளான் ஆம் மாணப்பிறப்பு, (351.1002) மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு' என்புழி நின்ற மருளும் மருண்மாலை (1222, 1236) என்புழி நின்ற மருளும் மயக்கம் என்ற பொருளனவேயாம். ஆயினும் ஒன்ருமோ?

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார்க்கும் தலைவர் திருவள்ளுவர். அவர் பேதைமைக்குப் பொருள் அறியாமை (அவிச்சை) என்ருரே அன்றி அறிவு (ஞானம்) என யாண்டும் கூறிற்றிலர். பரிமேலழகரும் எதனுரையிலும் அறிவென்றுரைத்திலர். பேதை (-பெண்), பேதைப்படுக்கும், பேதையென்னெஞ்சி என்னுஞ் சொற்கு அறியாமை என்ற பொருளையே குறித்தார்.

1. பேதைமை (-அவிச்சை, அஞ்ஞானம்) 2. அகங்காரம் 3. அவா 4. விருப்பு 5. வெறுப்பு என்ற குற்றம் ஐந்தனுள், முதலதாய பேதைமை ஏனைய நான்கற்கும் காரணம் ஆதலுடையது. அகங்காரம் அவிச்சையிலடங்கும். ஆசையில் அவா அடங்கும். பேதைமை, விருப்பு, வெறுப்பு மூன்றே உள. அவற்றுள் விருப்புக் காமம் எனப்பட்டது வெறுப்பு வெகுளி எனப்பட்டது. பேதைமை மயக்கம் எனப்பட்டது. அக்காமம் வெகுளி மயக்கம் மூன்றும் நோய் தருவன. அவற்றின் கெட்டொழிய வேண்டும் என்ருர் செந்நாப்போதார். ஒழிதற்பால மூன்றும் ஒழிந்தால் வினைப்பயன்களாகிய நோய் ஒழியும். ஒழிதற்குரிய மயக்கம் (-பேதைமை) வீட்டுணர்வுக்கு மறுதலைப்பண்பு. பிறப்புக்கு உடந்தைப்பண்பு. இவ்விரு பண்பையும் சாரும் உரிமை உயிர்க்கே உண்டு. பேதைமையைச் சார வேண்டும் வீட்டுணர்வை அகல வேண்டும் என்னும் நிலை என்றும் இல்லை. பேதைமையைத் தீர்தல்

வேண்டும் பிறவும் வீடு சேர்தல் வேண்டும் செறிவும் இப்பிறிவு செறிவுக்குரிய அறிவும் உயிர்க்கே உரியன. திருவைந்தெழுத்துள், யகாரம் நமக்களை அறிவதும் பிறிவதும் உடையது. அவற்றை அறிந்தும் பிறிந்தும் தன்னை அறிதலும் பிறிதலும் நிகழும். தன்னையறியும் அறிவு ஆன்மபோதம், தற்போதம், ஜீவபோதம், தன்னறிவு என அருணூல்கள் வழங்கும். தன்னைப்பிறிதல் என்பது அப்போத நீக்கமே அன்றி வேறில்லை. தற்போதம் நீங்கிச் சிவபோதம் உற்றுச் சிவமாகும் உரிமையுடைய ஆன்மா, பற்றுமுற்றும் அற்று நின்ற இடத்திற் பசுஞானம் ஆன்மஞானமாகின்றது. இரண்டும் பேதைமை ஆகா. ஞானம் அஞ்ஞானம் ஆகாது; விச்சை அவிச்சையாகாது; சித்து அசித்து ஆகாது. பேதைமை சித்தாகுமோ?"

திரோதனம், மாயை, கன்மம் முதலிய எல்லாம் 'மருள்' என்ற பெயராற் குறிக்கப்படுகின்றன. ஆணவம் ஒன்று இருள் எனப்படும். மும்மலத்தையும் பொதுமையில் இருள் எனல் குற்றம் அன்று. எவ்வாற்றானும் மருளும் இருளும் 'சிவாய' என்னும் மூன்றனையும் குறித்து ஆளப்படும் பெயரல்ல.

> 'மருளுந் தெருளும் மறக்குமவன் கண்
> அருளை மறவாதே யுந்தீபற
> அதுவேஇங் குள்ளதென்றுந் தீபற.'

என்னும் ஞானப்பாடல் இங்கு நோக்கத்தக்கது.

> 'தன்னறி வறியுந் தன்மைதன்னாலே தனை அறிந்தால்
> தன்னையுந் தானே காணும் தான் அது வாகி நின்றே'

என்றது சிவப்பிரகாசம். இதில் தன்னறிவு என்றது ஜீவபோதத்தை ஆயினும் மாயாமலம் நீங்கிய ஆன்மபோதம் என்றுதான் அந்நிலையிற் கொள்ளத்தக்க உண்மைப்பொருள். தன்னறிவு அறியுந்தன்மை என்றது திருவருளை. அத்திருவருளால் தன்னைக் காண்டலையே சிவரூபத்தின் நிகழும் ஆன்மதரிசனம் என்பர். அதைத்தான், தன்னறிவறியுந் தன்மை தன்னாலே தனையறிதல் (சிவரூபம்) என்றார். தன்மையால் என்றதன் இடையில் தன் என்னும் சாரியை நின்றது செய்யுளை நோக்கியது. தனை அறிந்தால் என்றது திருவருளாலே (பதிஞானத்தாலே) தனை-பதியை, அறிந்தால், தன்னையும்-ஆன்மாவையும் தானே காணும். காணுங்கால் தான்(ய) அது (வா) ஆகி நின்று காணும். அவனருளாலே அவன்தாள் வணங்குதல். அவனருளே கண்ணாகக்காணுதல் எல்லாம் இத்திறத்தைக் குறித்தனவே இது ஞான தரிசனம்.

அடுத்த திருவிருத்தம் ஆன்மசுத்தி சிவதரிசனம் (பரைதரிசனம்) கூறுவது சிவயோகமும் ஆண்டே (77) யடங்கும். சிவயோகம் 78-79.

(பாசம்) பாசஞானத்தாலும் (ஊனக்கண்-) பசுஞானத்தாலும் (உணராப்-) பார்ப்பரிய பதியை-) பரம்பரன் என்ற உண்மைப் பொருளை மருள்(-பாசம்) பேதைமை (-ஊனக்கண்) இரண்டாலும் உணராப் பதியென்று கூறலாமோ? குறளின்கண் பேதைமை என்ற சிவஞான போதத்தில் ஊனக்கண் எனப்பட்டதாமோ?

(தொடரும்)

மனம் மாறியது

பழ-தரும-ஆறுமுகம்

பஞ்சாயத்துத் தலைவர் பரமகுரு, பரம்பரைச் சைவக் குடும்பத்தில் பிறந்தவர். பழகிவந்த குற்றத்தால் அவர் நாத்திகவாதியாகி விட்டார். அவருடைய தந்தை நடராஜ தேசிகர் தெய்வபக்தி மிக்கவர். பாடல் பெற்ற தலமான அவ்வூர்ச் சிவன் கோவிலுக்குப் பரம்பரைத் தர்ம கர்த்தா அவர்தான். மகன் நாத்திகம் பற்றிப் பேசிக் கொண்டிருந் தாலும் பஞ்சாயத்துத் தலைவராகிப் பொதுத் தொண்டு செய்து கொண் டிருந்ததால் ஒரளவு திருப்தியடைந்தார்.

நடராஜ தேசிகர் சிவன்கோயிலைத் திருப்பணி செய்து தம் காலத் திலேயே கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டார், ஊர் மக்களை யெல்லாம் கூட்டித் திருப்பணிக் குழு ஒன்று அமைத்தார். தாம் ஒருவரே செலவு செய்து சிவன் கோயிலைத் திருப்பணி செய்யும் அளவுக்குச் செல்வந்தராக இருந்தாலும், ஊர்மக்களும் அதில் பங்கு கொள்ள வேண்டும் என்று கருதி ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் பாராமல் எல்லாருடைய வீடுக்ளிலும் சென்று நிதிவசூல் செய்தார்.

ஊர்மக்கள் அவரவர் தகுதிக்கேற்ப வாரிவழங்கினர். நிதி குவிந்தது. கோயில் திருப்பணியும் வெகுவேகமாக நடைபெற்றது. திருப்பணி வேலை முக்காற் பகுதி முடிவடைந்ததும் கும்பாபிஷேகத்திற்கு நாளும் குறித்து விட்டார். பரமகுருவுக்குத் தந்தையின் செயல்களில் ஈடுபாடு இல்லாவிட்டாலும், அவர் விஷயத்தில் தலையிடவில்லை.

தேசிகர் திடீரென்று நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகி விட் டார். திருப்பணி தடைப்பட்டு விடுமோ என்று ஊர் மக்களுக்குச் சிறிது பயம் ஏற்பட்டது. ஊர் முக்கியஸ்தர்கள் சிலர், தேசிகரிடம் ஆலோசனை பெற்றுத் திருப்பணியை முன்னின்று செய்து வந்தனர். கும்பாபிஷேகப் பத்திரிகை அச்சிடவேண்டியதுதான் பாக்கி, தேசிகர் அதற்குள் காலமாகி விட்டார்.

ஊர்மக்கள் மிகுந்த கவலை கொண்டனர். தேசிகரின் இறுதிச் சடங்குகளை எல்லாம் அவர் இளையமகன் சண்முகம் செய்தான். சடங்குகள் செய்வது தனக்குப் பிடிக்காவிட்டாலும் தம்பி சண்முகம் செய்வதில் பரமகுரு தலையிடவில்லை.

ஊர்ப்பொதுமக்கள் எல்லாரும் ஒன்று கூடினர். சிவன் கோயில் கும்பாபிஷேகம் குறிப்பிட்ட நாளில் நடந்தால்தான் தேசிகரின் ஆத்மா சாந்தியடையும்; அதனால் எப்படியும் கும்பாபிஷேகத்தை நடத்தி விடுவது என்று முடிவு செய்தனர். திருப்பணிக் குழுவுக்கு யார் தலைவராக இருப்பது? என்ற பிரச்சனை எழுந்தது. பலர் பலவிதமான யோசனை களைச் சொன்னார்கள். தேசிகரின் இளையமகன் சண்முகமோ சிறு பையன். ஆதலின் அவனைத் திருப்பணித் 'தலைவராக நியமிக்க இயல வில்லை. திறமை படைத்தவர் பலர் இருந்தாலும், தேசிகர் இருந்த இடத்தில் தாங்கள் இருக்க அச்சப்பட்டுப் பலர் தங்களுக்குத் திருப்பணிக்

குழுத்தலைவர் பதவி வேண்டாம் என்று சொல்லிவிட்டனர். கடைசியாக எல்லாரும் ஒருமனதாகப் பரமகுருவைக் கேட்டுக் கொள்வது என்று முடிவுசெய்தனர்.

ஊர்மக்கள் தன்னை இப்படி ஒரு இக்கட்டான நிலையில் மாட்டி வைப்பார்கள் என்று பரமகுரு எண்ணவே இல்லை. இருந்தாலும் ஊர் மக்களைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. காரணம் பரமகுரு அடுத்த பொதுத் தேர்தலில் அத்தொகுதியில் போட்டியிட முடிவுசெய்திருந்தார். "தாங்கள் பெயருக்குத் தர்மகர்த்தாகவும், திருப்பணிக்குழுத் தலைவராக வும் இருந்தால் போதும். கும்பாபிஷேகத்தை நாங்களே நடத்திக் கொள்கிறோம்" என்று ஊர்மக்கள் சொன்னதும் "சரி" என்று ஒப்புக் கொண்டார்.

திருப்பணிக்குழுத் தலைவராகவும் தர்மகர்த்தாவாகவும் பரமகுருவை நியமித்து, அறநிலைய ஆட்சித்துறையிலிருந்து ஊர்மக்களே உத்தரவு வாங்கிவிட்டனர்.

கும்பாபிஷேகப் பத்திரிகையும் அச்சிடப்பட்டுவிட்டது. கும்பாபி ஷேக நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. பரமகுரு சிவன் கோவில் பக்கமே தலைகாட்டவில்லை. கும்பாபிஷேகத்திற்கு 2 நாள் இருக்கும் போது, ஊர்மக்கள் மீண்டும் ஒன்று கூடிவந்து, பரமகுருவிடம் கும்பாபி ஷேகத்தன்று கட்டாயம் வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். வேறு வழியின்றிப் பரமகுரு ஒப்புக்கொண்டார்.

கோயில் தர்மகர்த்தாவாகவும் திருப்பணிக்குழுத் தலைவராகவும் இருந்து கொண்டு கும்பாபிஷேகத்தன்று மட்டும் செல்வது பரமகுரு வுக்குச் சங்கடமாக இருந்தது. அதனால் கும்பாபிஷேகத்திற்கு முதல் நாளே கோயிலுக்குச் சென்றார். யாக சாலையில் தானியங்களையும் பால் பழங்களையும் அர்ப்பணம் செய்வது கண்டு, அவர் மனம் படாத பாடு பட்டாலும், வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

மறுநாள் காலையில் கும்பாபிஷேகம்; இரவு சுவாமிக்கு அஷ்டபந்தன மருந்து சார்த்தவேண்டும். சுவாமியின் பீடத்திற்குக் கீழே, தங்கம் வெள்ளி மற்றும் விலைமதிப்பற்ற கற்களும், காசுகளும் இருக்கும். அறநிலையத்துறை அதிகாரிகள், தர்மகர்த்தா ஆகியோர் முன்னிலையில் தான் மருந்து சார்த்த வேண்டும்; இது ஆகமவிதி. இரவு வெகுநேரம் அறநிலையத்துறை அதிகாரிகள் வரட்டும் என்று அனைவரும் காத்திருந் தனர். நகரத்தை ஒட்டியிருந்த சிறு கிராமமான அந்த ஊருக்கு வந்து செல்லும் டவுன் பஸ்ஸின் கடைசி வண்டியும் வந்து போய்விட்டது. ஊர்மக்கள், தர்மகர்த்தாவான பரமகுரு முன்னிலையில் மருந்து சார்த்த முடிவு செய்தனர்.

பரமகுரு முன்னிலையில் கர்ப்பக்கிருகத்தினுள் இருக்கும் மூல லிங்கத் தின் ஆவுடையார் அகற்றப்பட்டது. லிங்கம் சுயம்புமூர்த்தி; ஆதலால் லிங்கத்தை எடுக்கவில்லை. ஆவுடையாருக்குக் கீழே பல பொன், வெள்ளி, நகைகள், காசுகள், முத்து, பவளம் முதலியன இருந்தன. பரமகுருவுக்கு இவையெல்லாம் வீண் என்ற எண்ணம் இருந்தாலும் பேசாமல் இருந்து விட்டார். அங்கிருந்த பொருள்களில் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட "பத்தரை மாற்றுப் பவுன்" ஒன்று அவர் மனத்தைக் கவர்ந்தது. அதை எப்படியும் தனதாக்கிக் கொள்ள அவர் முடிவு செய்தார். பாவ புண்ணியங்களைப்பற்றிச் சிறிதும் அவர் கவலை கொள்ளவில்லை.

கர்ப்பக்கிருகத்தினுள் பரமகுரு, கோயில் குருக்கள் இன்னும் நாலைந்து பேர்மட்டும் இருந்தனர். ஆவுடையார் அகற்றப்பட்டதும் இருந்தவர்களுள் குருக்கள் தவிர மற்றவர்கள் அஷ்டபந்தன மருந்தை இடித்து எடுத்துவரச் சென்று விட்டனர்.

சிவலிங்கத்தைச் சுற்றிலுமுள்ள பகுதிகள் எல்லாம் சுத்தம் செய்யப்பட்டன. குருக்களும், பரமகுருவும் அங்கிருந்து எடுக்கப்பட்ட பொருள்களையும் நகைகளையும் மீண்டும் ஒவ்வொன்றாக வைத்தனர். பரமகுருவுக்குத் தன் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. குருக்களை எப்படியாவது வெளியேற்றி விட்டால், தன் ஆசையைச் சுலபமாக நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று கருதினார். "குருக்கள் ஐயா, மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகிவிட்டது, எனக்கு இரவு நீண்ட நேரம் கண்விழித்துப் பழக்கம் இல்லை. ஆகவே, அஷ்டபந்தன மருந்தைச் சீக்கிரமாகக் கொண்டுவரச் சொல்லுங்கள்!" என்றார். பரமகுரு இவ்வளவு நேரம் இருந்ததே பெரிய காரியம் என்று எண்ணிய குருக்கள், மருந்து இடிப்பவர்களிடம் ஓடினார். இந்தச் சமயத்தில், பரமகுரு தான் நினைத்ததைச் செய்து முடித்தார்.

சிறிது நேரத்தில் குருக்களும், இன்னும் சிலரும் மருந்தைக் கொண்டு வந்தனர். "பத்தரை மாற்றுப் பவுன்" இல்லாததைக் கவனித்து விடுவார்களோ என்று எண்ணிய பரமகுரு, "சீக்கிரமாக ஆவுடையாரை எடுத்துவைத்து மருந்து சார்த்துங்கள்! எனக்கு நேரமாகி விட்டது" என்றார். வந்தவர்களும் மனத்தில் ஒன்றும் நினைக்காமல் ஆவுடையாரைத் தூக்கி, லிங்கத்தின்மீது வைத்துவிட்டு, அவசர அவசரமாக அஷ்டபந்தன மருந்தை எடுத்துச் சார்த்தப் போனார்கள்.

இந்தச் சமயத்தில், கர்ப்பக்கிருக விமானத்தின் உச்சியில் இருந்து "உஸ் உஸ்" என்று ஏதோ சத்தம் வரவே, திடுக்கிட்டு அண்ணாந்து பார்த்தனர். அவ்வளவுதான்! பரமகுரு உட்பட அனைவரும் வெலவெலத்துப் போய் விட்டனர். ஆம்; விமானத்தின் அடிப்பாகத்தில் நந்தா விளக்கு மாட்டியிருந்த கொக்கியின் உச்சியில் நாகப்பாம்பு ஒன்று படமெடுத்துச் சீறிக் கொண்டிருந்தது.

அச்சத்தால் நடுநடுங்கினர். பரமகுருவும் பயந்து விட்டார். 'கர்ப்பக்கிருகத்தில், நுழைவாயிலைத் தவிர, சுவாமிக்கு அபிஷேகமாகும் தீர்த்தம் செல்லும் சிறு வழியொன்றுதான் உண்டு; அப்படியிருக்கும் போது, நாகப்பாம்பு உள்ளேவர, வேறு வழியே இல்லை! அப்படியே வந்தாலும் நந்தாவிளக்கின் மேல் ஏறிச் செல்வது முடியாத காரியம்!' என்று குருக்கள் எண்ணினார். இது ஏதோ சோதனை என்று நினைத்தார்.

இதற்குள் சீறிக்கொண்டிருந்த பாம்பு மெதுவாகக் கீழிறங்கி வருவது தெரிந்தது; குருக்களைத் தவிர மற்றவர்கள் கர்ப்பக்கிருகத்திற்கு வெளியே ஓடிவிட்டனர். பாம்பு இறங்கி வருவதைப் பார்த்ததும், குருக்களும் வெளியே வந்துவிட்டார்.

பரமகுருவின் நாடிநரம்புகள் அடங்கி விட்டன. தம் குற்றத்தைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள முடிவு செய்தார். இதற்குள் அந்த நல்லபாம்பு நந்தாவிளக்கின் அகல் இருக்கும் பகுதிக்கு இறங்கி வந்து பழையபடி படமெடுத்துச் சீறிக் கொண்டிருந்தது.

பரமகுரு திடீரென்று கர்ப்பக்கிருக வாயிலின் முன் சென்று நெடுஞ் சாண் கிடையாக விழுந்து வணங்கினார். ஆங்காங்கு வேலை செய்து கொண்டிருந்த அனைவரும் திரண்டு விட்டனர். நாத்திக வாதியான பரமகுரு இறைவன் சந்நிதானத்தில் விழுந்து வணங்குவது, அங்கே பாம்பு வந்ததைவிடச் சிலருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஐந்து நிமிட நேரம் அப்படியே விழுந்து கிடந்த பரமகுரு, பிறகு எழுந்து நின்றார். நடுங்கிக் கொண்டே தன் மடியில் மறைத்து வைத்திருந்த பத்தரை மாற்றுப் பவுனை எடுத்துக் கர்ப்பக்கிருக வாயிற்படியில் வைத்தார். பிறகு கூட்டத்தை நோக்கி, "பக்தர்களே! உங்கள் வேண்டுகோளுக்கு இணங்கித் தர்மகர்த்தாவாகவும், திருப்பணிக்குழுத் தலைவராகவும் இருந்தேன். இருந்தாலும் நூறு வருடங்களுக்கு முற்பட்ட பத்தரை மாற்றுப்பவுனை அபகரித்துக் கொள்ள ஆசைப்பட்டேன். ஆவுடையாரை அகற்றியதும், குருக்களைத் தவிர மற்றவர்கள் மருந்து இடிக்கச் சென்று விட்டனர். என் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள எண்ணிய நான் மெதுவாகக் குருக்களையும் வெளியே அனுப்பிவிட்டுப் பவுனை எடுத்து மறைத்து வைத்தேன். மருந்தை எடுத்துக் கொண்டு அவர்கள் வந்ததும், அவசரப்படுத்தி ஆவுடையாரை எடுத்து வைத்து மருந்து சார்த்தச் சொன்னேன். பிறகு நடந்தது தான் உங்களுக்குத் தெரியும்; என் மனத்தை மாற்றத்தான் எனக்கு ஆண்டவன் சந்நிதானத்தில் இந்தச் சின்னபுத்தி ஏற்பட்டிருக்கிறது. கோயிற் காரியங்களை என்ன தான் நாம் கண்காணித்துக் கொண்டிருந்தாலும் அனைத்துக்கும் மேலாக ஆண்டவன் ஒருவன் நம் ஒவ்வோர் அசைவையும் பார்த்துக் கொண் டிருக்கிறான் என்பதை நான் இப்போது நம்புகிறேன். அவனுக்குத் தெரியாமல் நாம் எதையும் செய்து விடமுடியாது என்பதை உணர்ந்து விட்டேன். நாத்திகம் பேசிய பழைய பரமகுரு மறைந்து விட்டான். அடியேனை மன்னித்து விடுங்கள்! இனிமேல் என் தந்தை வழியில் நானும் நின்று, எல்லாக் காரியங்களையும் செய்வேன்!" என்று பேசி முடித் தார். பரமகுருவை மன்னித்து ஏற்றுக் கொள்ளும் வகையில் எல்லாரும் கைதட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

பரமகுருவின் பேச்சில் ஈடுபட்டிருந்த அனைவரும் இதுவரை நாகப் பாம்பைக் கவனிக்கவில்லை. இப்போது தான் அவர்களுக்குப் பாம்பின் நினைவு வந்தது. கர்ப்பக்கிருகத்தினுள்ளே பார்த்தனர். அங்கே நந்தா விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. நாகப்பாம்பைக் காண வில்லை.

பிறகு, பரமகுருவைப் பத்தரை மாற்றுப் பக்த பரமகுருவாக மாற்றிய அந்தப் பவுனையும் பீடத்தின் கீழே வைத்து, அஷ்டபந்தனம் சார்த்தினர். காலையில் கும்பாபிஷேகம் நடந்தபோது பரமகுருவின் நெற்றியில் பட்டை பட்டையாகத் திருநீறு விளங்கியது. நடராஜ தேசிகர் இவை யனைத்தையும் மேலிருந்து பார்த்துத் திருப்திப்பட்டுக் கொண் டிருந்தார்!

குறிப்பு; ஒரு பாடல்பெற்ற திருத்தலத்தில் கும்பாபிஷேகத்தன்று நடை பெற்ற உண்மை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு புனையப்பெற்றது.

திருமாலடியார்

இராமாநுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், எம்.ஏ., பி.ஓ.எல்.

(17)

கூரேசனின் தியாகம் :

இராமாநுசர் தம் சீடர்களுக்கு ஸ்ரீவைஷ்ணவ தத்துவங்களை விளக்கமாக உபதேசித்து வந்தார். அறிவிற் சிறந்தவர்களான கூரத்தாழ்வான், முதலியாண்டான், அருளாளப் பெருமாள் எம்பெருமானார் போன்றவர்கள் வைணவத்தின் தொன்மையையும், பெருமையையும் எல்லா உயிர்களிடத்தும் சமமாக நோக்கும் பண்பினையும் சுவாமி வாயிலாகக் கேட்டுத் தலையசைத்து மகிழ்ந்திருந்தனர். இந்தச் சீடர் குழுவுக்கு ஒரு சோதனை காலம் வந்து விட்டது. தங்களுடைய அருமையான ஆசாரியரைப் பிரிய நேர்ந்தது. அதைவிட மனத்தாலும் பிறர்க்குத் தீங்கு நினைக்காத கூரத்தாழ்வானுக்குக் கொடுமை நேர்ந்தது.

குலோத்துங்கசோழனின் தீவிர சைவ பக்தி :

அக்காலத்தில் சோழநாட்டை யாண்ட குலோத்துங்க சோழன் சைவ நெறியில் மிகவும் ஊற்றமுடையவனாக விளங்கினான். எங்கும் நிறை பொருளாய், பரம்பொருளாய் விளங்குபவன் சிவபெருமானேயன்றி வேறு தெய்வமில்லை யென்ற கருத்தில் தளராத நம்பிக்கையுடையவனாய் விளங்கினான். அவனுடைய அவைக்களப் புலவர்களும், அமைச்சர்களும் அரசன் கருத்தையே எங்கும் பரப்பிவந்தனர். அதற்கு ஏற்ற வகையில் 'சிவனைவிட மேலான தெய்வம் வேறு இல்லை' என்று பட்டோலையில் எழுதி எல்லா அறிஞர்களிடமும் கையெழுத்து வாங்கும்படி உத்தரவு போட்டிருந்தனர். அரசனது ஆணைக்கு அஞ்சிக் கையெழுத்திட்டவர்களும், செல்வத்திற்கும், சுகவாழ்விற்கும் ஆசைப்பட்டுக் கையெழுத்துப் போட்டவர்களுமாய் நாட்டில் பலர் இருந்தனர்.

நாலூரான் கூற்று :

சோழ மன்னரின் அமைச்சர்களில் நாலூரான் என்பவரும் ஒருவர். அவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர். கூரத்தாழ்வானின் சீடருமாவார். அந்த அமைச்சர் அரசனை நோக்கி "அரசே! தங்கள் பட்டோலையில் எழுதப்பட்டுள்ள கருத்தை ஏற்று இந்நாட்டில் எத்தனை

பண்டிதர்கள் கையெழுத்துப் போட்டாலும் பலனில்லை. வைணவகுல மாமணியாய், திருவரங்கப் பெருநகருள் வாழ்ந்துவரும் இராமாநுசரும், எனது ஆசார்யரான கூரத்தாழ்வானும் கையெழுத்திட்டால்தான் செல்லுபடியாகும். அவர்கள் கையெழுத்துப் போடுவார்களாகில் அன்றே நீர் வெற்றி பெற்றவராவீர்'' என்று கூறினர்.

அரசனும் அதுகேட்டு 'உடனே இராமாநுசரை நாம் அழைத்ததாகச் சொல்லி அவைக்கு அழைத்து வாருங்கள்' என்று ஆட்களைப் போக்கினன். அரசன் ஆணையை மேற்கொண்டு அவர்களும் திருவரங்கத்தை அடைந்தனர். இராமாநுசருடைய மடத்தைக் கேட்டறிந்து இரவில் அங்கு வந்து தங்கினர். இரவு நேரமாகையால் காலையில் இராமாநுசரைச் சந்தித்துப் பேசலாம் என்று அங்கேயே படுத்துக்கொண்டனர். நாலூரான் சூழ்ச்சியையும், அரசனது வெறியுணர்ச்சியையும் பற்றி அவர்களுக்குள் பேசிக்கொண்டனர்.

இவ்விதம் அவர்கள் பேசிக்கொள்வதைக் கேட்ட மடத்துச் சீடர் ஒருவர் உடனே இந்தச் செய்தியைக் கூரத்தாழ்வானிடம் தெரிவித்தார். ஆழ்வானும் ஒருகணம் சிந்தித்துப் பார்த்தார். 'அரசரால் நம்மிராமாநுசருக்கு என்ன தீங்கு வருமோ?' என்று உள்ளம் நொந்தார். திடீரென்று அவருக்கு ஒரு யுக்தி தோன்றியது. அதாவது நாமே இராமாநுசர் வேடத்தில் துவராடையாகிய காஷாயத்தைத் தரித்து முக்கோலுடன் சென்று விடுவது. அப்படிச் செய்வதால் அரசனல் வரக்கூடிய ஆபத்தைத் தாமே ஏற்றுத் தமது குருவான இராமாநுசரைக் காப்பாற்றி விடலாம் என்பதே அந்த யோசனையாகும். அதன்படி ஒருவரிடமும் சொல்லாமல் மறுநாள் காலை தாமாகவே இராமாநுச கோலத்தோடும் (காஷாய திரதண்டத்துடன்) அரச சேவகர்களை யணுகிப்பேசி அவர்களுடன் சென்று விட்டார்.

இராமாநுசரின் அதிர்ச்சி :

மறுநாள் பொழுது விடிந்தவுடன் இராமாநுசர் காலையில் நீராடிய பின் தன் துவராடையைக் கொடியில் காணுமல் திகைத்தார். அப்பொழுது அங்கு வந்த முதலியாண்டான் "சுவாமீ! தேவரீர் எழுந்திருக்கும் முன்பே நம் கூரத்தாழ்வான் துவராடை சாத்திக் கொண்டு முக்கோலுடன் அரசசேவகர்களோடு சென்ருராம். அதைச் சில சீடர்கள் கண்டு என்னிடத்தில் தெரிவித்தார்கள். அதைச் சொல்லவே யான் ஓடோடி வந்தேன்'' என்ருர். அவ்வாசகங்களை இராமாநுசர் சிறிது சிந்தித்தார். 'திருவரங்கன் இப்படியும் நம்மைச் சோதிக்கின்ருனே?' என்று வியப்படைந்தார். அவருக்கு எல்லாம் புரிந்து விட்டது. இதற்கு முன்பே சோழ அரசனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிருர். தம்மைக் காப்பாற்றவே நமது அருமைச் சீடரான கூரத்தாழ்வான் இவ்வாறு தமது கோலத்தில் சென்றிருக்கிருர் என்பதை ஒருவாறு ஊகித்து உணர்ந்தார். இனி என் செய்யவேண்டும் என்று யோசித்

திருக்கும் வேளையில் ஆழ்வானின் சீடர்களில் ஒருவன் இராமானுசரைத் தண்டனிட்டு "இது ஆழ்வார் தேவரீருக்கு எழுதிய ஓலை" என்று ஒரு திருமுகத்தை அளித்தான்.

ஓலையின் வேலை :

இராமானுசரும் அதை வாங்கிப் படித்தார். அதில் சோழ அரசன் சைவ நெறியில் வெறி கொண்டிருக்கிறான் என்றும் அவனால் வைணவ சமயத்துக்கும், வைணவ சமயத்தலைவராகிய இராமானுசருக்கும் எந்த நேரத்திலும் ஆபத்து வரலாம் என்றும் எழுதப்பட்டிருந்தது. அதோடு இராமானுசரைக் காவியாடைக்கு மேல் வெண்ணிற ஆடையை யணிந்து கொண்டு முக்கிய சீடர்களின் பாதுகாவலோடு உடனே திருவரங்கத்தை விட்டு நீங்கி, மறைவான காட்டுப் பிராந்தியங்களில் சில காலம் மறைந்து வாழ வேண்டும் என்றும் வேண்டுகோளாக எழுதப் பட்டிருந்தது. ஓலையைப் படித்த இராமானுசர் ஸ்ரீவைஷ்ணவ தரிசனத் திற்காக பெரிய ஆபத்தை எதிர்நோக்கி அரசவைக்குச் சென்றுள்ள ஆழ்வானின் குருபக்தியையும், தியாக உள்ளத்தையும் எண்ணிக் கண்ணீர் உகுத்தார். இனி ஆழ்வானைப் போன்ற அறிவிலும், தியாகத் திலும் உயர்ந்த ஒரு சீடரைப் பெற முடியுமோ என்று துக்கித்தார். அருகிலிருந்த அணுக்கத் தொண்டர்கள் ஆறுதல் கூறினார்கள்.

'இனி இங்கு ஒரு கணமும் இருக்கக் கூடாது. உடனே புறப்பட வேண்டும்' என்று விரைவு படுத்தினர்.

இராமானுசரும் ஆழ்வானின் யோசனைப்படி வெள்ளாடை அணிந்து கொண்டு முக்கியச் சீடர்களுடன் பெரிய பெருமாளை வணங்கி விண்ணப் பித்துக் கொண்டு திருவரங்கத்தை விட்டு நீங்கி நீலகிரி மலைச்சாரலை நோக்கி நடந்தார்.

சில நாட்களில் நீலகிரிமலையை அடைந்தார். அங்கே சில வேடர்கள் வைஷ்ணவக் கோலத்தில் திருமண்காப்போடு காணப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் தங்களை நல்லான் சக்கரவர்த்தியின் சீடர்கள் என்று சொல்லிக் கொண்டார்கள். இராமானுசரையும், மற்ற சீடர்களையும் அவர்கள் உபசரித்தார்கள். பின்பு, "சுவாமீ! திருவரங்கத்திலிருந்து வருவதாகக் கூறுகிறீர்களே, அங்கு எங்கள இராமானுசர் நலமாக இருக்கின்றாரா?" என்று விசாரித்தார்கள். இராமானுசருக்குத் தூக்கி வாரிப்போட்டது. இந்தக் காட்டில் வாழும் வேடர்களும் எப்படித் தம் பெயரை அறிந்திருக்கிறார்களென்பதே அதற்குக் காரணம். சுவாமி, வேடர்களை நோக்கி "உங்களுக்கு இராமானுசரை எப்படித் தெரியும்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "எங்கள் ஆசாரியரான திருமலை நல்லான் சக்கரவர்த்தி இராமானுசருடைய அரும்பெருங் குணங்களைச் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் அவரைக் கண்டு வணங்கும் பேறு பெற்றிலோம்" என்றார்கள்.

இராமாநுசர் அவர்களைப் புன்முறுவலோடு நோக்கினர். "நீங்கள் உங்கள் ஆசாரியரைப்பற்றி விரிவாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "சுவாமி! எங்கள் ஆசாரியர் சாதிச் செருக்குச் சிறிதும் இல்லாதவர். அதற்குக் காரணத்தை அவரே கூறியுள்ளார். இராமாநுசருடைய வாக்கும், வாழ்வும் தான் உயர்ந்த சாதியில் பிறந்த என்னைத் திருத்திப் பணி கொண்டது என்று எங்கள் குருவான நல்லான் அடிக்கடி கூறுவார்'' என்றும் கூறினர்.

"அது எப்படி?'' என்று மேலும் இராமாநுசர் அவர்களை வினவினர். உடனே அவ்வேடவர்களின் தலைவன் "எங்கள் குருவான நல்லான் என்பவர் ஒருசமயம் ஆற்றில் மிதந்து வந்த பிணத்தைக் கரையேற்றினர். ஆனல், அந்தப் பிணம் தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கப்பட்ட ஒருவருடைய பிணமாகும். எனவே அவ்வூரில் உயர்ந்த சாதிக்காரர்கள் அந்தப் பிணத்தை எரிக்க நல்லானுடன் ஒத்துழைக்கவில்லை. உடனே அவர் எங்களையெல்லாம் உதவிக்கு அழைத்து அந்தப் பிணத்துக்கு உயர்ந்த சாதிக்காரர்களுக்குச் செய்வதுபோல சாத்திர முறைப்படி ஈமச் சடங்குகளைத் தானே செய்தார். அதனல் கோபங்கொண்ட அவ்வூரார் அந்தப் பிராம்மண குலத் தோன்றலாகிய நல்லானைத் தங்கள் சாதியிலிருந்து தள்ளிவைத்து வெறுத்து விட்டார்கள். அப்பொழுது எங்கள் குருவான நல்லான், திருவரங்கத்தில் மாறநேர்நம்பி என்கிற தீண்டாதாருக்குப் பெரியநம்பி என்கிற பிராம்மண குலத்திலே தோன்றிய ஆசாரியர் இராமாநுசரின் உதவியோடு சாத்திரமுறைப்படி ஈமச்சடங்குகளைச் செய்தார். அவரைவிட நான் உயர்ந்தவனு என்று சொல்லி இராமாநுசருடைய சாதி வேற்றுமையற்ற குணங்களைக் கொண்டாடிப் பேசியுள்ளார். அதிலிருந்து நாங்கள் இராமாநுசனடியார்களாகத் திருமண் காப்பு தரித்து சங்குசக்கரப் பொறியை அந்தத் திருமலை நல்லான் சக்கரவர்த்தியிடமே பெற்றுக்கொண்டு அவருடைய சீடர்களாய் வாழ்ந்துவருகிறோம்'' என்றான்.

இராமாநுசர் அவர்களுடைய ஆசாரிய பக்தியைக் கொண்டாடி "வேடர்குல திலகங்களே! உங்கள் நல்லான் நாட்டுக்குப் பொல்லான், நமக்கு நல்லான் என்று பாராட்டி இறையடியார்களிலே உயர்வு தாழ்வில்லை. சாதிகள் அங்கு இல்லை. அங்கு பக்தனே காணப்படுகிறான்'' என்று உபதேசம் செய்து, 'நீங்கள் காணக்காத்திருக்கும் இராமாநுசர் யாமே' என்று அருளிச் செய்தார்.

வேடர்களும் அவ்வுரை கேட்டவாறே வேரற்ற மரம் போலே கீழே வீழ்ந்து வணங்கினர். பெரும்பேறு பெற்றதாகக் கூறி இராமாநுசருக்கும் அவருடைய சீடர்களுக்கும் தேனும் தினையரிசியையும் உண்ணக் கொடுத்து உபசாரம் செய்தனர்.

(தொடரும்)

திருத்தணிகை

"பிரபாகரன்"

1 அமைவிடம் :

ஆறுமுகனுக்கு உகந்த படைவீடுகள் ஆறு. அவை 1. திருப்பரங்குன்றம், 2. திருச்சீரலைவாய் எனப்பெறும் திருச்செந்தூர், 3. திருவாவினன்குடி எனப்பெறும் பழனி 4. திருவேரகம் எனப்பெறும் சுவாமிமலை, 5. குன்றுதோருடல் 6. பழமுதிர்சோலை. இவற்றுள் குன்றுதோருடல் எனப்பெறும் ஐந்தாவது படைவீட்டில் முருகன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் குன்றுகள் அனைத்தும் அடங்கும். அதில் மூர்த்தி தலம் தீர்த்தம் எனும் முச்சிறப்பும் பொருந்தி விளங்குவது, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருத்தணி ஆகும். இத்திருத்தலம், சென்னையிலிருந்து திருப்பதி செல்லும் வழியில் 85 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. மிகப் பழமையான திருக்கோயிலும், சிற்பக்கலைத் திறன் கொண்ட மூர்த்திகளும் அமையப்பெற்றுள்ளன. தற்போது மலைமீது பேருந்துகளும் பிற வாகனங்களும் செல்லும் வகையில் மலைப் பாதை அமைக்கப்பெற்றுள்ளது.

2. வரலாற்றுச் சுருக்கம் :

சான்றோர்கள் மிக்க தொண்டை நன்னாட்டில், அமைந்துள்ள இத்திருத்தணிகைத் திருத்தலத்தில் புராண வரலாற்றின்படி, ஆணவங்கொண்டு தன்னை வணங்காது சென்ற பிரும்மாவிடம் பிரணவப் பொருள் கேட்டு, அவன் சொல்லாததால் அவனைச் சிறைப்படுத்தித், தானே படைப்புத் தொழிலை முருகப்பெருமான் மேற்கொண்டார். பின் சிவபெருமானின் வேண்டுதலுக்கிணங்க அவரிடம் பிரணவத்தின் பொருளை உபதேச முறையில் எடுத்துரைத்தார். அதைக் கேட்டருளிய சிவபெருமான் இன்பக் கூத்தாடி வீராட்டகாசம் புரிந்ததும், திருநந்திதேவர், அகத்தியர், பிரும்மா, திருமால், இந்திரன், இராமன் முதலானோர் திருவருள் பெற்றதும் இத்திருத்தலத்திலேயேயாம். திருமாலின் பெண்களாகிய சுந்தரவல்லி, அமுதவல்லி ஆகிய இருவரில், சுந்தரவல்லி, தொண்டை நாட்டில் மேற்பாடி என்னும் ஊருக்கருகிலுள்ள மலைச்சாரலில் வள்ளிக்கிழங்குகளுக்கு இடையே, வாம மடமானின் வயிற்றில் தோன்றினாள்; வள்ளியம்மையாக வளர்ந்தாள்; காமக்குறவர்களிகூறப் பூங்குயில்போல் ஏனற்புனங்காத்து இனிதிருந்தாள். தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த வள்ளியம்மையை, முருகப்பெருமான் திருமணம் செய்துகொண்டருளிய தலமும் இதுவாகும். அசுரர்களுடன் போர் புரிந்து சினந்தணிந்து

சாந்த மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் தலமாதலால், திருத்தணி, செருத்தணி, தணிகை, தணிகாசலம் எனவும், தேவலோகச் செல்வச் சிறப்புக்களெல்லாம் பொருந்தியுள்ள இடமாதலால் சீபூரணகிரி (செல்வம் பொருந்திய மலை) எனவும் வழங்கப்பெறுகின்றது.

3. எழுந்தருளும் மூர்த்தி (உற்சவர்)

பண்ணேறு மொழியடியார் பரவி வாழ்த்தும் பாதமலரழகினை யுடைய முருகப்பெருமான், தன்னை விரும்பி வழிபடும் அடியவர்களுக்குத் திருவருள் பாலிக்க எழுந்தருளும் திருக்கோலச் சிறப்பும், கலைச்சிறப்பும் பொருந்தியவை இங்குள்ள எழுந்தருளும் மூர்த்திகள் (உற்சவர்கள்) ஆகும்.

4. திருவிழாக்கள் :

(அ) ஆடிப் பெருவிழா : இத்திருக்கோயிலில் நடைபெறுகின்ற திருவிழாக்களில் சிறப்புடையது ஆடிக் கிருத்திகையில் நடைபெறும் தெப்பத் திருவிழா ஆகும். இது ஜுலை மாதப் பிற்பகுதியிலோ அல்லது ஆகஸ்டு மாத முற்பகுதியிலோ நடைபெறும். இத்திருவிழாவில் இலட்சக்கணக்கான மக்கள் மழித்த (மொட்டைத்) தலைகளோடு மலர்க்காவடி ஏந்தி, மயில் வாகனின் மாட்சிமையை முழக்கமிட்டுச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும். பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் திருமுடிக்காணிக்கை செலுத்துகின்றனர். 3 நாட்களுக்குச் சுவாமி தெப்பத்தில் எழுந்தருளிக் காட்சி கொடுப்பார். ஆண்டு தோறும் காவடிகளின் எண்ணிக்கையும் உண்டியல் வருமானமும் பெருகிக் கொண்டே வருகின்றன.

(ஆ) திருப்படித் திருவிழா : இத்திருவிழா ஒவ்வொரு ஆங்கில ஆண்டும் டிசம்பர்த் திங்கள் 31-ஆம் நாளில் நடைபெறுகிறது. இவ்விழாவில் தமிழக முழுவதிலிருந்தும் வரும் வழிபாட்டுக் குழுவினரும், பிற மாநிலங்களிலிருந்து வரும் ஏராளமான பொதுமக்களும் கலந்துகொள்கின்றனர். ஒவ்வொரு படிக்கும் ஒரு பாடல் பாடி, கற்பூரம் கொளுத்தி வழிபட்டுச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

5. நீராழி மண்டபமும் அலுவலகமும் :

நீராழி மண்டபமும், திருக்குளமும் தொன்மைச் சிறப்புடையவை. இப்புனித நீரில் மூழ்கி எழுந்தால் பவப்பிணி நீங்கும் என்பது சான்றோர்களின் அருள்வாக்கு. இத்திருக்குளத்தில் ஆடிக் கிருத்திகைத் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது.

அறிந்தும் அறியாத திறத்திலும் வந்து நீராடு வோர்க்கு உடல் அழுக்கோடு, உள்ள மாசுகளையும் விலக்கித் தூய்மை தருகின்ற, இத்திருக்குளத்தில் ஏராளமான அடியவர்கள் நீராடிப் பலன் பெறுகிறார்கள்.

அடியவர்களின் வசதிக்கு ஏற்ப இத்திருக்கோயிலின் அலுவலகம் திருக்குளத்திற்கும், மலைக்குச் செல்லும் படிகளுக்கும் அருகில் அமைந்துள்ளது.

6. சுதை வேலைப்பாடுகள் :

(அ) விண்ணோறும் அரிமுதலோர்க்கு அரிய ஞான விளக்காகவும், நம் இரு கண்களாகவும், மெய்வீட்டின் வித்தாகவும் விளங்கும் முருகப்பெருமான் தண்ணேறுபொழில் தணிகை மணியாக வீற்றிருந்தருளும் திருக்கோயில், கோபுரங்கள் ஆகியவற்றின் எழில், கண்டு மகிழத்தக்கது.

(ஆ) ஆறுபடை வீடுகளிலும் முருகன் எழுந்தருளியிருக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க காட்சிகள், அப்படைவீடுகளுக்குச் செல்ல முடியாத அடியவர்கள் கண்டுகளிக்கும்படி சுதை வேலைப்பாடுகளில் அமைக்கப்பெற்றுள்ளன.

7. தங்கும் வசதி :

பயணிகளின் வசதிக்கு ஏற்ப எல்லா விதமான நவீன அமைப்புக்களும் கொண்ட 48 அறைகள், "தணிகை இல்லம்" என்ற பெயரில் தங்கும் விடுதியாக அமைக்கப் பெற்றுள்ளது.

8. கோயில் நிர்வாகம் :

இத்திருக்கோயில் நிர்வாகம், தமிழ்நாடு அரசு இந்து சமய ஆட்சித்துறைக்குட்பட்டதாகும். தற்போது உதவி ஆணையர் தரத்தில் ஒரு செயல் அலுவலரும், அறங்காவலர்கள் ஐவரும் இத்திருக்கோயில் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்கள்.

9. தலத்தைப்பற்றிய நூல்கள் :

கச்சியப்ப முனிவர் இயற்றிய "திருத்தணிகைப் புராணம்" இத்திருத்தலத்தின் வரலாற்றை இனிய தமிழில் எடுத்தியம்புகிறது. இதுதவிர, அருணகிரிநாதரும், திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளும் இத் திருத்தலத்திற்குப் பாடல்கள் அருளிச்செய்துள்ளனர்.

குறிப்பு: 31-12-74 அன்று திருப்படித் திருவிழா நடைபெறுவதை யொட்டி வெளியிடப் பெறுகிறது.

வருக! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்ருக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கிய மாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் முதலான இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/– வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப் பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர்: சேக்கிழார்தாசன் இராமசேஷன்

நலமலியுந் திருத்தில்லை மன்றினினின் றருடு
    நடராசற் கன்றுமுதன் மகபூசை நடத்தி
யலகில்புகழ்த் தில்லைவா ழந்தணர்க்கும் வெவ்வே
    றமுதுபடி கறியமுது முதலான வெல்லா
நலமலிசெங் கோல்வளவன் றப்பாமே நாளு
    நடத்திவர வரனடியார் நிறைந்துபதஞ் சலியும்
புலிமுனியுந் தவஞ்செய்த பெரும்பற்றப் புலியூர்
    பூலோக சிவலோக மெனப்பொலிந்து தோன்ற. 83.

(இ-ள்): நலமலியுந் திருத்தில்லை-நன்மை மிகுந்த திருத்தில்லை மாநகரத்தின்கணுள்ள; மன்றினினின்றருடு நடராசற்கு-சிற்சபையினிடத்து ஆனந்த நிருத்தஞ் செய்தருளும் நடேசப்பிரானுக்கு; அன்றுமுதன் மகபூசை நடத்தி-அன்று முதல் மகாபூசைகளை நடத்தி; அலகில் புகழ்த்தில்லை வாழந்தணர்க்கும்-அளவில்லாத புகழையுடைய தில்லைவாழந்தணர்களுக்கும்; வெவ்வேறமுதுபடி கறியமுது முதலான வெல்லாம்- வெவ்வேருகத் திருவமுதமைத்தற்கு அமுதுபடி கறியமுது முதலிய பொருள்களையெல்லாம்; நலமலி செங்கோல் வளவன்-மேன்மைபொருந்திய செங்கோலையுடைய அநபாயசோழன்; தப்பாமே நாளு நடத்திவர-தவருமல் நாடோறும் நடத்திக் கொண்டுவர; அரனடியார் நிறைந்து-சிவனடியார்கள் நிறைந்து; பதஞ்சலியும் புலிமுனியுந் தவஞ்செய்த- பதஞ்சலிமுனிவரும் வியாக்கிரபாத முனிவரும் தவஞ்செய்த; பெரும்பற்றப் புலியூர்-பெரும்பற்றப் புலியூரென்னும் சிதம்பரமானது; பூலோக சிவலோகமெனப் பொலிந்து தோன்ற-பூலோக சிவலோகமென்று சொல்லும்படி பிரகாசிக்க. (எ-று).

மருவுதிரு முறைசேர்ப்பா ரெழுதுவா ரிருந்து
    வாசிப்பார் பொருளுரைப்பார் கேட்டிருப்பார் மகிழ்ந்து
சிரமசைத்துக் கொண்டாடிக் குதுகுலிப்பார் சிரிப்பார்
    தேஎரிப்பார் குன்றைமுனி சேக்கிழார் செய்த
வரியதவத் தினைநினைப்பா ரம்பலவர் முன்னு
    ளடியெடுத்துக் கொடுக்க விவர்பாடினரென் றுரைப்பார்
பெரியபுரா ணங்கேட்ட வளவர்பிரான் செவிக்குப்
    பிடிக்குமோ வினிச்சிந்தா மணிப்புரட்டென் றுரைப்பார். 84

(இ-ள்): மருவுதிருமுறை சேர்ப்பாரெழுதுவார்-பொருந்திய திருமுறை யெழுதப் புத்தகம் சேர்ப்பவர்களும் எழுதுபவர்களும்; இருந்து வாசிப் பார் பொருளுரைப்பார்-இருந்து அதை வாசிப்பவர்களும் அதற்குப் பொருள் சொல்வோர்களும்; மகிழ்ந்து கேட்டிருப்பார்-அப்பொருளைக் களிப்படைந்து கேட்டுக்கொண்டிருப்பவர்களும்; சிரமசைத்துக் கொண் டாடிக் குதுகுலிப்பார்-சிரக்கம்பனம் செய்து கொண்டாடி மகிழ்ச்சி யடைபவர்களும்; சிரிப்பார் தேனிப்பார்-ஆனந்தத்தால் நகை கொள் பவர்களும் தேனிக்கின்றவர்களும்; குன்றைமுனி சேக்கிழார் செய்த-குன்றைமுனி என்னுஞ் சேக்கிழார் நாயனர் செய்தருளிய; அரியதவத் தினை நினைப்பார்-அருமையாகிய தவத்தைக் குறித்துப் பெரிதாகக் கருதுவோர்களும்; அம்பலவர் முன்னுளடியெடுத்துக் கொடுக்க-நடேசப்பிரான் முன்னுள் முதலடி எடுத்துக் கொடுக்க; இவர் பாடின ரென்றுரைப்பார்-சேக்கிழார் நாயனர் பாடிமுடித்தனரென்று புகழ் பவர்களும்; பெரியபுராணங் கேட்ட-இந்தப் பெரியபுராணத்தைக் கேட்ட; வளவர்பிரான் செவிக்கு-அநபாயசோழன் செவிக்கு; இனிப் பிடிக்குமோ சிந்தாமணிப் புரட்டென்றுரைப்பார்-இனி சிந்தாமணி யாகிய வெறுங் கதையேற்குமோவென்று சொல்பவர்களுமாய். (எ-று).

தேனித்தல்-தேன் முதலிய உண்டான்போல் களிப்பால் நாவைச் சுவைத்தல்.

இத்தகைய சிறப்புடனே திருத்தொண்டர் புராண
மிருந்தன்பர் பாராட்ட நடந்தெதிரா மாண்டு
சித்திரையா திரைநாளின் முடியவது கண்டு
திருத்தொண்ட ரரவெனும்பே ரொலியெழுந்து பொங்கக்
கத்துதிரைக் கடலொலியை விழுங்கிமுழங் கோரேழ்
கடலொலியைக் கீழ்ப்படுத்திப் பிரமாண்ட வெளியைப்
பொத்தியிமை யவர்செவியை நிறைத்துயரப் பொங்கிப்
பொன்னுலகுக் கப்பாலும் புகழ்பொலிந்த தன்றே. 85

(இ-ள்): இத்தகைய சிறப்புடனே-இத்தன்மையாகிய சிறப்புடனே; திருத்தொண்டர் புராணம்-திருத்தொண்டர் புராணத்தை; அன்பரி ருந்து பாராட்ட நடந்து-அன்பர்களிருந்து பாராட்டுதல் செய்ய அது நடந்து; எதிராமாண்டு சித்திரை யாதிரைநாளில்-மறுவருடம் சித்திரை மாதம் திருவாதிரைத் திருநாளில்; முடியவது கண்டு-நிறை வேற யதனையறிந்து; திருத்தொண்டர்-சிவனடியார்கள் துதிக்கும்; அரவெனும் பேரொலி யெழுந்து பொங்க-அரகரவென்னும் பேரோசையானது மேலோங்கி அதிகரித்து; கத்து திரைக்கட லொலியை விழுங்கி-ஒலிக்காநின்ற அலையையுடைய பெரும் புறக்கட லின் ஒலியை யடக்கி; முழங்கோரேழ் கடலொலியைக் கீழ்ப்படுத்தி-சத்திக்கின்ற எழுகடலின் ஒலியையும் அடக்கி; பிரமாண்ட வெளியைப்

பொத்தி-பிரமாண்டத்தின் இடைவெளியை மூடி; இமையவர் செவியை நிறைத்துயரப் பொங்கி-தேவர்கள் செவியை நிறைந்து மேலே எழுந்து; பொன்னுலகுக்கப்பாலும் புகழ்பொலிந்தது-தேவலோகத்துக்கப்பாலும் போயுடுருவிப் பொலிந்தது. (எ-று).

அன்று ஏ-அசை.

திருத்தொண்டர் புராணமெழு தியமுறையை மறையோர்
சிவமூல மந்திரத்தா லருச்சனைசெய் திறைஞ்சி
யிருக்குமுதன் மறைநான்கி னின்றுமுத லாக
விதுவுமொரு தமிழ்வேத மைந்தாவதென்று
கருத்திருத்தி யமுதடைக்காய் நறுந்தூப தீபங்
கவரிகுடை கண்ணாடி யாலத்தி நீறு
பரித்தளவு செயக்கண்டு வளவர்பிரான் முறையைப்
பசும்பட்டி னாற்சூழ்ந்து பொற்கலத்தி லிருத்தி 86

(இ-ள்): திருத்தொண்டர் புராண மெழுதிய முறையை-திருத்தொண்டர் புராணத்தையெழுதிய திருமுறையை; மறையோர் சிவமூலமந்திரத்தாலருச்சனை செய்திறைஞ்சி-தில்லைவாழந்தணர்கள் மூர்த்தி மந்திரத்தாலும் மூலமந்திரத்தாலும் அருச்சனை செய்து வணங்கி; இருக்குமுதன் மறைநான்கின்-இருக்கு முதலாகிய நான்கு வேதங்களுடன்; இன்றுமுதலாக விதுவுமொரு தமிழ்வேதமைந்தாவதென்று கருத்திருத்தி-இன்றுமுதல் இதுவும் ஐந்தாவது தமிழ்வேதமென்று கருத்திற்கொண்டு; அமுதடைக்காய் நறுந்தூபதீபம்-திருவமுது தாம்பூலம் நல்லதூபதீபங்கள்; கவரிகுடைக்கண்ணாடி யாலத்தி நீறுபரித்து-சாமரை குடை கண்ணாடி ஆலத்தி விபூதி இவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு; அளவு செயக்கண்டு-உபசாரஞ்செய்ய அதனைத் தரிசித்துப் பின்; வளவர்பிரான் முறையைப் பசும்பட்டினாற் சூழ்ந்து பொற்கலத்திலிருத்தி-அநபாயசோழன் திருமுறையைப் பொற்பட்டினாற் சூழ்வித்துப் பொற்றட்டில் வைத்து. (எ-று).

கண்ணாடி குடை முதலியன பூசைக்குரிய சோடசோபசாரங்களுள் ஒன்றாதலின் உடன் கூறினர். மந்திரமென்றது பிரித்துமுன்னுங் கூட்டப்பட்டது.

செறிமதயா னைச்சிரத்திற் பொற்கலத்தோ டெடுத்துத்
திருமுறையை யிருத்தியபின் சேவையர்கா வலரை
முறைமைபெற வேற்றியர சனுங்கூட வேறி
முறைமையினா லிணைக்கவரி துணைக்கரத்தால் வீச
மறைமுழங்க விண்ணவர்கள் கற்பகப்பூ மாரி
மழைபொழியத் திருவீதி வலமாக வரும்போ
திறைவர்திரு வருளை நினைந் தடலரசர் கோமா
னிதுவன்றோ நான்செய்த தவப்பயனென் றிசைத்தான்.

(இ-ள்): செறிமதயானைச் சிரத்தில்-மதத்தையுடைய பட்டத்துயானையின் பிடரில்; பொற்கலத்தோடெடுத்துத் திருமுறையை யிருத்தியபின்-பொற்றட்டுடனெடுத்துத் திருமுறையை வைத்தபின்; முறைமை பெறச் சேவையர் காவலரையேற்றி-முறைமையாகச் சேக்கிழார் நாயனாரை யானையின்மேல் எழுந்தருளச் செய்து; அரசனுங்கூட வேறி-தாமுங்கூட அதில் ஏறி; முறைமையினுலிணைக்கவரி துணைக் காத்தால் வீச-இது இவர்க்குத் தான்செய்யத்தகும் என்னுங் கருத்தோடு தமது இரண்டு கைகளாலும் இரண்டு சாமரைகளை வீச; மறை முழங்க-வேதங்கள் முழங்கவும்; விண்ணவர்கள் கற்பகப் பூமாரி மழை பொழிய-தேவர்கள் கற்பக மலர்களைப் பெரிய மழையைப்போல பொழியவும்; திருவீதிவலமாக வரும்போது-திருவீதியை வலமாக வருங்கால்; இறைவர் திருவருளை நினைந்து-நடேசப்பிரான் திருவருளை நினைந்து; அடலரசர் கோமான்-பெரிய அரசர் பிரானாகிய அநபாய சோழன்; இதுவன்றோ நான்செய்த தவப்பயனென்றிசைத்தான்-நான் செய்த தவப்பயன் இதுவல்லவோ என்று ஆனந்தித்துச் சொல்லினன். (எ-று).

இவ்வாறுங் குளகம்.

வாரணத்தி லிவரைவரக் கண்டதிரு வீதி
மறுகுதொறுந் தூய்மைசெய்து வாழைகளு நாட்டிப்
பூரணகும் பமுமமைத்துப் பொரியுமிகத் தூவிப்
பொன்னரிமா லையுநறும்பூ மாலைகளுந் தூக்கித்
தோரணங்க ணிரைத்துவிரை நறுந்தூப மேந்திச்
சுடர்விளக்கு மேற்றியணி மணிவிளக்கு மேந்தி
யாரணங்கள் விரித்தோதி மாமறையோ ரெதிர்கொண்
டறுகெடுப்ப வாழ்த்தெடுத்தா ரரம்பையர்க ளெல்லாம். 88

(இ-ள்): வாரணத்திலிவரை வரக்கண்ட திருவீதி மறுகுதொறும்-சேக்கிழார் நாயனார் அரசனுடன் யானையின்மீது பவனிவரக்கண்ட வீதிகள்தோறும்; தூய்மைசெய்து வாழைகளுநாட்டி-திருவலகிட்டு நீர்தெளித்து வாழைமரங்களையும் நிறுத்தி; பூரணகும்பமுமமைத்து-நிறைகுடங்களையும் வைத்து; பொரியுமிகத்தூவி-பொரிகளையும் அதிகமாக இறைத்து; பொன்னரிமாலையு நறும்பூமாலைகளுந் தூக்கி-பொன்னரிமாலைகளையும் மணமுள்ள மலர் மாலைகளையுந் தொங்கவிட்டு; தோரணகங்ணிரைத்து-தோரணங்களையும் வரிசையாகக்கட்டி; விரைநறுந்தூபமேந்தி-வாசனை கமழ்கின்ற நல்ல தூபங்களையும் எடுத்து; சுடர் விளக்குமேற்றியணி மணி விளக்குமேந்தி-ஒளிதரும் தீபங்களும் ஏற்றி அழகிய மாணிக்க தீபங்களும் வைத்து; ஆரணங்கள் விரித்தோதி-வேதங்களை விரிவாக ஓதி; மாமறையோரெதிர் கொண்டறுகெடுப்ப-மறையவர்கள் எதிர்கொண்டு வந்து அறுகினால் ஆலாத்தி செய்ய; வாழ்த்தெடுத்தாரரம்பையர்களெல்லாம்-அரமாதர்கள் மங்களம் பாடினார்கள். (எ-று).

(தொடரும்)



இல்லையே என்னாத இயற்பகையார்

க. கலியாணம், எம்.ஏ., டிப். எக்கான்.,

காவிரியாறு கடலையும் தூய்மையாக்கும் தீர்த்தத்துறையுடையது பூம்புகார் நகரம். அங்கு பெருங்குடி வணிகர் மரபில் தோன்றியவர் இயற்பகையார் என்பவர். சிவனடியார் யாரேனும் எது வேண்டுமாயினும் இல்லை என்னாது கொடுக்கும் இயல்பினர். சிவபெருமான் இவருடைய வள்ளன்மையை உலகுக்குக் காட்டத் திருவுள்ளம் கொண்டார். ஒரு மறையவர் வேடத்தில் அவர் இல்லத்துக்கு வந்தார். "அடிகள் இங்கு எழுந்தருளியது எங்கள் முன்னோர் செய்த தவம்" என்று சொல்லி வரவேற்றார் வணிகப் பெருமகனார். "அடியார்கள் வேண்டியதை இல்லையென்னாது, நீர் கொடுக்கும் உண்மையைக் கேட்டு, நும்பால் ஒன்று வேண்டி வந்தனம். அதற்கு இசைந்தால் சொல்லுகிறோம்" என்றார் வந்த அந்தணர். "எந்தப் பொருளும் என்னிடமிருந்தால் அது அடியவர் உடைமை. அதில் ஐயமில்லை. அடிகள் அருள் செய்யலாம்" என்று கூறினார் இயற்பகையார். "உம் மனைவி வேண்டும்" என்றார் அம்மாய வேதியர். "நல்லவேளை, என்னிடம் முன்பேயுள்ள பொருளைக் கேட்டது நான் பெற்ற பேறு" என்று சொல்லி மனைவியாரை விளித்து, "நான் உன்னை இந்த முனிவருக்குக் கொடுத்தேன்," என்றார். முன்னர் சிறிது திகைத்து, பின்னர் தெளிந்த அவ்வம்மையார், "தாங்கள் ஆணையிட்ட ஒன்றைச் செய்வதல்லது வேறு உரிமை எனக்குண்டோ" என்று மொழிந்து, வந்த மறையவர் திருவடிகளை வணங்கினார். "நான் இனிச் செய்ய வேண்டிய பணி யாது" என்று இறைஞ்சினார் வணிகர். "உன் மனைவியை அழைத்துப்போக உன் உறவினர்-ஊரார் இவர்களிடமிருந்து காப்பதற்குத் துணையாக நீ வரவேண்டும்" என்றார் முனிவர். உடனே வாள் கேடயங்களுடன் சித்தமானார் இயற்பகையார், சுற்றத்தாரும் மற்றையோரும் "இத்தகைய செயலைச் செய்த இயற்பகை ஒரு பித்தன். இதற்கு நாங்கள் இசைய மாட்டோம்" என்று தடுப்பதற்காக ஒருங்கு திரண்டு சூழ்ந்தனர். அடியவர் பயப்படுவதுபோல் பாவனை செய்தார். "இறைவனே! அஞ்சவேண்டாம். இயற்பகை வெல்லும்"

என்ருர் அம்மையார். எதிர்த்த அனைவரையும் கண்டதுண்டமாக வெட்டி வீழ்த்திக் கொன்ருர் வணிகனர். அவ்விருவருடனும் சாய்க்காடு வரை சென்ருர். "நீர் திரும்பலாம்" என்று இயற்பகையாரைப் பார்த்து மறையவர் சொன்னர். திரும்பிப் பார்க்காமல் திரும்பினர் அவரும். மீளவும் அழைத்து ஓலமிட்டார் அவ்வேதியரும். "இதோ வந்தேன், வந்தேன். இன்னும் பிழைத்துப் போனவர் இருந்தால் என் வாளுக்கு இரையாக்குவேன்" என்று கூறி விரைந்தார் இயற்பகையார். மனைவியாரைக் கண்டார், மறையவரைக் காணவில்லை. அவ்வளவில் வான வீதியில் சிவபெருமான் உமாதேவியாருடன் இடபவாகனத்தில் எழுந்தருளிக் காட்சியளித்தார். நாயனரும் பரம்பொருளின் திருவருளை வியந்து ஏற்றிப் போற்றினர். இறைவனும் "நீயும் நின் மனைவியும் நம்முடன் வருக" என்று அருள்பாலித்துப் பொன்னம்பலத்துள் புகுந்தார்.

நாயன்மார்கள் ஒவ்வொருவரும் தமக்கென ஒரு குறிக்கோளை வகுத்துக்கொண்டனர்; வகுத்துக்கொண்டபடியே வாழ்ந்தனர்; அதற்கு இடையூறு ஏற்பட்டால் அஞ்சாமல் நின்று வெற்றி பெற்றனர். நாமும் ஒரு சிறந்த குறிக்கோளுடன் வாழவேண்டும் என்பதே அவர்கள் காட்டிச் சென்ற நெறி. அவ்வகையில் தலைசிறந்து விளங்கியவர் இயற்பகையார். தம்மிடம் உள்ளதை இல்லை என்னது வழங்கல் வள்ளன்மைக்கு அழகு. அதற்கு எடுத்துக்காட்டாக நின்றவர் இந்த நாயனர். ஒரு மனிதனுக்கு பனிமலர்க்குழல்பாவை நல்லாரினும் இனிய பொருள் வேறென்றுமில்லை. அதைப் பிறனுக்குக் கொடுக்க முடியாது, கொடுக்கவும் கூடாது. அப்படிச் செய்வது உலகியலுக்கு மாருனது. தான் முன் சொன்ன சொல்லைத் தட்டாமல் இயற்பகையார் மனைவியாரை மறையவருக்கு ஈந்தார். மேலும் "எல்லாம் உன் அடிமையே, எல்லாம் உன் உடைமையே" என்றபடி நமக்கென எதுவும் உரிமை கொண்டாடுவதற்கில்லை. ஈசன் கொடுத்தது; அவன் கேட்டான்; கொடுத்தார் நாயனர், அதுவும் கொடுக்க முடியாத ஒரு பொருளை; அதனல்தான் அவர் வரலாறு தனிப் பெருமையுடையது. "செயற்கருஞ்செய்கை செய்த தீரனே" என்று சிவபெருமான் ஓலமிட்டு அவரை அழைக்கிருர். "செயற்கரிய செய்வார் பெரியார்" என்ற திருக்குறளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் இயற்பகை நாயனர்.

குறிப்பு: இந்த நாயனரின் மார்கழித் திங்கள் உத்திர நட்சத்திரத்தை யொட்டி இக்கட்டுரை இவ்விதழில் இடம் பெறுகிறது.

உ

அருள்மிகு வேட்டராயப் பெருமாள்
மற்றும்
கோதண்டராம சுவாமி திருக்கோயில்கள்
ஆலத்தூர்,
திண்டிவனம் வட்டம்,
தென்னுற்காடு மாவட்டம்.

—: o :—

தூணிலும் துரும்பிலும் கலந்திருக்கின்ற பரம் பொருளாகிய இறைவன், அடியார்கள் உய்யும்பொருட்டு, ஆலத்தூரில் அருள்மிகு வேட்டராயப் பெருமாளாகவும் மற்றும் அருள்மிகு கோதண்டராம சுவாமியாகவும் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து, தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு வேண்டுவன வேண்டியாங்கு ஈந்து அருள்பாலிக்கிருர்.

ஆலத்தூர், திண்டிவனம் - சென்னைச் சாலையில்- சூணம்பேட்டிற்கு முன், அதாவது திண்டிவனத்திலிருந்து 16 மைல் தொலைவில் உள்ளது.

யாத்திரீகர்களும் மெய்யன்பர்கள் பலரும் ஆலயத்திற்கு வருகை தந்து இறை அருள் பெற்றுய்ய வேண்டுகிரேம்.

இங்ஙனம்

சி. ஈசுவரன், பி.ஏ.பி.டி.,ஐ.இ. (டிப்.)
செயல் அலுவலர்.

அறங்காவலர்கள்

திரு. R. V. ஜானகிராமன், திரு. கோ. சுப்பராயபிள்ளை,
திரு. சி. ஜெகநாதன்.

சமயபோதனை

பாடம் 9   வினாக்கள்   டிசம்பர் 1974

வினாக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 31-12-1974க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்]   [மதிப்பெண் 100

1. பௌத்த சமயம் தோன்றக் காரணம் என்ன? விளக்குக,
2. "கடவுள் வழிபாட்டினையே புத்தர் மறுத்தார்" என்று கூறுவோர் காட்டும் காரணங்கள் என்னென்ன?
3. "பொருள்வேறு; பொருளல்லன வேறு" விளக்குக.
4. "அன்பில்லாதவர்கள் வாழ்பவர்கள் ஆகார்" விளக்குக.
5. திருத்தணிகைத்தல வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுக.
6. குலோத்துங்கனின் தீவிர சைவ பக்தியைத் தெளிவாக்குக.
7. எப்போது இம் மண்ணுலகம் சொர்க்கமாகும்?
8. நீலகிரி மக்களின் குருவான திருமலை நல்லான் சக்கரவர்த்தியின் சாதிச் செருக்கு அற்ற காரணத்தைக் கூறுக.
9. "மனம் மாறியது" கதை மூலம் தெரிந்து கொண்டது என்ன?
10. இயற்பகையாரிடம் சிவபெருமான் எதைக் கேட்டார்? அதன் பிறகு என்ன நடந்தது?

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்:—

"அருளோசை"
தமிழ்நாடு தெய்விகப் பேரவை,
9, மகாராஜா சூரியராவ் சாலை,
ஆள்வார்பேட்டை,
சென்னை-600018.

பாவை விழா அறிவிப்பு

தமிழ்நாட்டில் ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் ஏதாவதொரு திரு விழாவை அமைத்துள்ளனர், நம் தமிழ்ச் சான்றோர். மாதங்களில் எல்லாம் சிறந்த மாதம் மார்கழி. எனவேதான் கீதையுள் இறைவன் "மாதங்களில் நான் மார்கழியாய் இருக்கின்றேன்" எனச் சொல்கின்றான். மார்கழித் திங்களில் ஒவ்வொரு நாளும் இறைவனுக்கே உரியது. எனவேதான் மார்கழி மாதத்தில் வீடுகளில் செய்யப்படும் இதர சுப காரியங்கள் விலக்கப்பட்டன. மேலும் இம்மாதத்தில்தான் சிவ பெருமானுக்குரிய திருவாதிரைத் திருநாளும், திருமாலுக்குரிய வைகுண்ட ஏகாதசியும் வருகின்றன. [அதுமட்டுமல்ல-இசுலாமியர் களின் திருவிழாவான பக்ரீத் திருநாளும், கிறித்தவர்களின் திருவிழா வான கிறித்துமசும் இம்மாதத்திலேயே வருவது குறிப்பிடத்தக்கது].

மார்கழி ஒவ்வொரு நாளிலும் சைவப் பெருமக்கள் மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களையும் வைணவப் பெருமக்கள் ஆண்டாள் அருளிய திருப்பாவைப் பாடல் களையும் ஓதுதல் மரபு. தற்காலத்தில் சமய ஒருமைப்பாடு கருதி இரு திறத்தாரும் இரு பாவையும் ஓதும் வழக்கம் ஏற்பட்டுள்ளது.

எனவே நம் பேரவையுடன் இணைந்துள்ள சங்கங்களும் பள்ளி களும் பாவைப் பாடல்களை ஓதிப் பயன்பெற வேண்டுகிறோம். கிளைச் சங்கங்களும், இந்து தனியார் பள்ளிகளும் தங்களுக்குத் தேவையான பாவைப் பாடல் புத்தகங்களைப் பேரவைக்கு எழுதிப் பெற்றுக் கொள்ள லாம். வழக்கம்போல் இவ்வாண்டும் சங்கங்களும், பள்ளிகளும் நடத்தும் பாவைப் போட்டியில் பரிசுகள் பெறும் முதல் மூவருக்குப் பேரவையி லிருந்து வெள்ளிக்காசுகள் வழங்கப்பெறும். உரிய காலத்தில் விண்ணப்பித்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். பாவைப் புத்த கங்கள் வேண்டும் அன்பர்கள் அன்புகூர்ந்து தங்களுக்கு அண்மையில் உள்ள பார்சல் சர்வீஸ் லாரி புக்கிங் ஆபீஸின் பெயரைத் தெளி வாகவும், தவறாமலும் குறிப்பிட்டனுப்பினால் புத்தகங்கள் உடனுக்குடன் தாமதமின்றிக் கிடைக்கத் துணையாக இருக்கும்.

மேலும் பாவைப்போட்டியில் பரிசுபெறுபவர்களுக்கு நூல்கள் பரிசளிக்க விரும்புவோர், பேரவையின் வெளியீடுகளை வாங்கியளிக்க வேண்டுகிறோம்.

1.	திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு சிறப்பு மலர் ...	5	00
2.	அப்பரடிகள் மலர்	4	50
3.	திருஞானசம்பந்தர் (படவரலாறு)	1	00
5.	ஆண்டாள் (படவரலாறு) அச்சில்	2	00

மேற்காணும் உரிய தொகையுடன் அஞ்சல் செலவிற்கு 50 காசுகள் சேர்த்து "செயலாளர், தமிழ்நாடு தெய்விகப் பேரவை, 9, மகா ராஜா சூரியாராவ் சாலை, சென்னை-600 018" என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்

உ

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியெழுச்சி

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே ! உன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச் செய்தானே
வண்திருப் பெருந்துறை யாய் வழி அடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே !
கடலமுதே ! கரும்பே ! விரும் படியார்
எண்ணகத் தாய் உலகுக்கு உயிரானாய்
எம்பெருமான் ! பள்ளி எழுந்தருளாயே !

— மாணிக்கவாசகர்

திருச்சிற்றம்பலம்

• • •

Edited, Printed at Peravai Achakam and Published by A. Narayanaswamy B. A., for the Tamil Nadu Deivika Peravai at No. 9. Maharaja Surya Rao Road Alwarpet. Madras-600018